விலை ரூபா 15.00

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

07-06-2009

மலர்: 133 இதழ்: 10 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# தூய ஆவியாரின் துணையோடுதான் எம் வாழ்வை நாம் வளப்படுத்த முடியும்

## திருவிழிப்பு ஆராதனையின்போது யாழ் ஆயர்

எமது வாழ்வு தற்போது பல்வேறு இழப்புகள், ஏமாற்றங்கள், அடிமைத்தனங்கள் மத்தியில் நெருக்கடிக்குள்ளான வாழ்வாக மாறியுள்ள வேளையில், எமது வாழ்வை வளப்படுத்தி எமக்கு நிறைவைத் தரவல்லவர் தூய ஆவியார் ஒருவரே. அதனால்தான் நாம் இம்மைதானத்தில் ஆயிரக் கணக்கில் கூடி நித்திரை கொள்ளாது விழித்து செபத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறு யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் கடந்த 30ம் திகதி சனிக்கிழமை இரவு யாழ். புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் இடம்பெற்ற திருவிழிப்பு ஆராதனையின் நிறைவில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின்போது மறை உரை ஆற்றுகையில் தெரிவித்தார்.



இறைதியான இல்ல ஊழியர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட இத்திருவிழிப்பு நிகழ்வுகளில் நீக்கிலஸ் பப்பா தலைமையிலான பிரான்சிஸ்கன் சபை மூன்றாம் சபையினர், பாசையூர் புனித அந்தோனியார் ஆலய இளைஞர் மன்றத்தினர், திருக்குடும்ப சபை வழிகாட்டி யுவதிகள், புனித யாகப்பர் ஆலய சாரணர் குழுவினர், புனித மடுத்தீனார் குருமட மாணவர்கள், அருட்சகோதரர்கள் ஆகியோர் உதவிக்கரம் நீட்ட நிகழ்வுகள் சிறப்புற நிறைவேறின. யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து இறைமக்கள் ஒரே குடும்பமாக ஒன்றுகூடி செபித்தார்கள்.

பல்வேறு உலக சக்திகளில் நாம் நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டு என்றுமே வெற்றியைக் கொணரும் சக்தியாகிய தூய ஆவியாரின் அருட்பொழிவின் வல்லமையிலேயே நாம் நம்பிக்கை கொள்ளவேண்டுமெனவும், அவ்வல்லமை ஒருபோதும் எம்மைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பங்கு பற்றிய இத்திருவிழிப்பு ஆராதனை மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலையோடும், குரு முதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழிப்புத் திருப்பலியோடும் ஆரம்பமானது. அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற திருவிழிப்பு ஆராதனைகளை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் குழுவினர், அருட்தந்தை ஜெயசீலன் குழுவினர், அமல மரித்தியாகிகள் சபை அருட்சகோதரர்கள், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி குழுவினர், அருட்தந்தை பிராயன் அடிகள், திருக்குடும்ப கன்னியர் சபையினர், திருவுளப் பணியாளர் சபையினர் ஆகியோர் முன்னெடுத்துச்செல்ல, அருட்தந்தை லோரன்ஸ் அடிகளாரது அருட்பொழிவு ஆராதனையுடன் நிறைவுபெற, பின்னர் ஆயர் தலைமையிலான தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலியோடு முற்றுப் பெற்றன.

# மக்களின் துயரில் துணிச்சலோடு துணைநின்று உயிரை அர்ப்பணித்த உத்தமர்

## சறத்ஜீவன் அடிகளாரின் இறுதி நிகழ்வுகள்



முள்ளிவாய்க்கலிலிருந்து வரும்போது மாரடைப்பினால் இறைபதமடைந்த அருட்தந்தை ம. சறத்ஜீவன் அடிகளின் இறுதி நிகழ்வுத் திருப்பலி கடந்த மே மாதம் 26ம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. சீரற்ற விமானப் போக்குவரத்து காரணமாக அவருடைய உடலை யாழ்ப்பாணம் கொண்டுவரமுடியாத நிலையில் கொழும்பில் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உடல் தகனம் செய்யப்பட்டது. பின்னர் அவருடைய அஸ்தி யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு ஆயர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொழும்பில் அருட்தந்தையினுடைய இறுதி நிகழ்வுகள் நடைபெற்ற தினத்தன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் அருட்தந்தையின் குடும்ப அங்கத்தவர்களோடு யாழ் குடாநாட்டில் பணியாற்றும் குருக்கள், அருட்சகோதரிகள், உறவினர், நண்பர்கள், பங்குமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டு அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடினார்கள்.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

அருட்பணி. அலைக்சாண்டர் S.S.S



இலங்கையில் கடந்த முப்பது வருடங்களிற்கு மேலாக நடைபெற்று வந்த போர் நிறைவிற்கு வந்து விட்டது. பல்லாயிரக்கணக்கில் உயிரிழந்து உடமையிழந்து அகதிகளாக உண்ண உணவின்றி அகதி முகாம்களில் அடைக்கப்பட்டவர்களாக தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களால் ஐம்பது வருடத்திற்கு மேலாக போராடி வரும் அவர்களின் உரிமைகள் தரப்பட்டனவா? என்பது இன்றைய எம் இளம் சந்ததியினரின் பலம் உடைக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் அவர்களின் கேள்விக்குறியாக மாறியுள்ளது கேள்வியாக இருக்கின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு தமிழர்கள் முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் கலாச்சாரம் வேறுபட்டாலும் தமிழ் மொழியைப் பேசுகிறவர்கள் என்ற வகையில் ஒன்றுபடுகின்றார்கள். இவர்கள் சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களை பின்பற்றினாலும் ஒரே கடவுள் என்ற கொள்கையில் ஒன்றுபட்டு இருக்கின்றனர். இவ்வாறாக பல்வேறு வகையிலும் ஒன்றுபட்டிருக்கும் எமக்கு ஏன் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எம்மிடையே பல்வேறு விதமாக வேறுபாடுகள் காணப்படுகின்றன. அரசியல், சாதி, பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன் என்ற வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையே இன்றைய தமிழரின் பிரச்சனைகளிற்கு அடிப்படைக் காரணமாயுள்ளன. தமிழ் பேசும் மக்களாகிய நாம் பிளவுபட்டு இருப்பதைக் கண்டு அதை சாதகமாகக் கொண்டு சிங்கள அரசு எமக்கு உரிமைகளை வழங்க மறுக்கின்றன. மேலும் மேலும் எவ்வளவிற்கு எம்மை பிளவுபடுத்த முடியுமோ? அந்த அளவிற்கு பிளவுபடுத்தி எம் தமிழின ஒற்றுமையை சீர்குலைக்கவே விருமபுகின்றன. இதை நாம் அறியாமல் அவர்கள் காட்டும் பாதையில் சென்று எம் இனத்திற்கு நாமே துரோகம் செய்து கொண்டு இருக்கின்றோம். தமிழ்த்தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. முப்பது வருட கால போரை முடிவுக்கு கொண்டு வந்த எம் அரசு ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அதை கேட்டுப் பெற்றுக் கொள்வதைவிட வேறு வழியில்லை. ஆனால் நாம் பிளவுபட்டிருந்தால் அதை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்வது? தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றாக செயற்படும் போதுதான் உலக

(8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்காவிடில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## இதயங்களில் பொறித்துவையுங்கள்

மனித வரலாற்றிலே வெற்றியடைந்த மீட்பு வரலாறு ஒன்றே ஒன்றுதான் உண்டு. அந்த மீட்புப் போராட்டத்தை தலைமைதாங்கி நடாத்தியவர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துதான்.

அன்பை, மன்னிப்பை, சமத்துவத்தை, தியாகத்தை ஆயுதங்களாகக் கொண்டு நடாத்தப்பட்ட போராட்டம் அது.

அதற்குரிய தேவையான ஆயத்தங்களெல்லாம் செய்து முடிக்கப்பட்ட பிற்பாடு அப்போராட்டம் இறுதிக்கட்டத்தை அடைந்தபோது ஏற்படவிருந்த ஒரு மாபெரும் தவறு தவிர்க்கப்பட்டதுதான் இதன் வெற்றிக்குக் காரணம் என்று கூறவேண்டும்.

"பேதுரு, உன் வாளை உறையில் போடு. வாளெடுத்தவன் வாளால் மடிவான்." என்ற திடமான, உறுதியான கட்டளையால்தான் தவறான வழியில் திசைதிரும்பி படுதோல்வியை சந்திக்கவிருந்த ஒரு வரலாறு காப்பாற்றப்பட்டது என்று தெளிவாகக் கூறலாம்.

சாந்தத்தையும் தாழ்ச்சியையும்விட மேலான வலிமை வாளுக்கு இல்லை என்பதை வெளிப்படுத்திய போராட்டம்தான் வெற்றியைக் கொணர்ந்தது.

யாரிடம் செல்வோம் இறைவா! வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன என்று வெறுமனே பாடிக்கொண்டு, அழிவைத்தரும் வார்த்தைகளின் பின்னால் வாழ்க்கையின் வெற்றியைத் தேட முற்படக்கூடாது என்பது நாம் பெற்றுக் கொள்ளவேண்டிய பாடம். இயேசுவின் வாழ்வும் வார்த்தைகளும் புறக்கணிக் கப்பட்டால் வெறுமைதான் மிஞ்சும் என்பதை நாம் காணவிரும்பாமல், தொடர்ந்தும் தவறான வழிகளுக்கு நியாயம் கற்பிக்க முற்படவேண்டாம்.

இயேசுவின் திரு இருதயத்தில் விளங்கிய சாந்தமும் தாழ்ச்சியும் அடிமை வாழ்வின் வெளிப்பாடுகள் அல்ல. அவை உண்மையான சுதந்திரத்தை தாறும் அது பணிந்து அயலவருக்கும் அள்ளி வழங்கிய பண்புகள் என்பதை இயேசு அனுபவம் மட்டும்தான் விளங்கப்படுத்தும்.

இதனால்தான் அவருடைய மீட்பு வரலாறு தோல்வியில் முடிந்ததாக பலராலும் கணிக் கப்பட இன்றுவரை, உலக முடிவுவரை வெற்றிவரலாறாக வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

வாளை உறையில் போட்டவர்களாக அன்புடனும், சாந்தத்துடனும், தாழ்ச்சி யுடனும் கடந்த காலங்களில் பலர் போராடி மறைந்திருக்கின்றார்கள். அவர்களின் தியாகம் பலன்கொடுக்கும் என்பதையும் நாம் மறந்தலாகாது.

அத்துடன் வாளெடுப்பவன் வாளால் மடிவான் என்ற வல்லமைமிக்க வார்த் தைகளை நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் இரத்தத்தினால் எமது இதயங்களில் ஆழமாகப் பொறித்துவைக்கவேண்டும். எம் எதிர்கால சந்ததிகளின் இதயங்களிலும் இவ்வார்த்தைகளை இயேசுவின் இரத்தத்தைக் கொண்டு பொறித்துவிடவேண்டும்.

இவற்றை நாம் கூறும்போது, இவர்களுக்கு வரலாறு தெரியாது, வரலாற்றை கொச் சைப்படுத்துகிறார்கள் என்ற வழமையான, காலாவதியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து இவற்றை அசட்டை செய்ய தயவுசெய்து முன்வரவேண்டாம்.

**இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுடையவரான இயேசுவே!**
**எங்கள் இருதயங்களை உமது இருதயத்தைப் போலாக்கியருளும்.**

**அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம்**

## மாண்டர்க்கு உண்மை விடுதலை வாழ்வை அளிக்கவல்லது இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமுமே!

**அருட்சகோ. றமேஸ் அ.ம.தி**

உலக வரலாற்றில் மனித வாழ்வை ஆழ மாக ஆராய்கின்ற போது, இறைவனோடு, சமூ கத்தோடு, குடும்போடு, தனிமனிதனோடு, இயற் கையோடு உள்ள உறவுகளை வளர்க்க வேண் டும் என்ற உணர்வு கொண்டவர்களை காண முடிகிறது. இந்த உறவை வலுப்படுத்துவ தற்காக சிலர் உள்ளதைக் கொடுப்பார்கள் சிலர் உள்ளதிலிருந்து கொடுப்பார்கள். சிலர் உள்ளத்தைக் கொடுப்பார்கள். மேலாக உலகம் வாழ்வு பெற தனது உடலையும் இரத் தத்தையும் முழுமையாக கொடுத்தவரின் தியாக அன்பு அனைத்திலும் உயர்ந்தது. இதைத்தான் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் அன்பின் அடையாளமான நற்கருணை பிரதிபலிக்கிறது.

அப்பத்தின் வடிவத்திலும் இரசத்தின் வடி வத்திலும் ஆண்டவர் இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமும் அவர் ஆன்மாவும் தெய்வீக மும் அடங்கிய திருவருட்சாதனமே நற்கருணை எனப்படும். நம் மீட்பர் தாம் காட்டிக் கொடுக்கப் பட்ட இரவிலே தமது இறுதி இராவுணவைப் பந் தியில் தம் உடல், இரத்தம் ஆகியவற்றாலான நற்கருணைப் பலியை ஏற்படுத்தினார். தாம் மீண்டும் வருமளவும் எல்லாக் காலங்களிலும் தமது சிலுவைப் பலியை நின்று நிலைக் செய்தார். தம் அன்பு மணமகளாம் திருச்சபையிடம் தமது இறப்பு உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் நினை வுச் சின்னத்தை விட்டுச் செல்லவும் இப்பலியை ஏற்படுத்தினார். நற்கருணை விருந்திலே கிறிஸ்து உண்ணப்படுகிறார். அதன் மூலம் நாம் அருளால் நிரப்பப்படுகிறோம் என்பதே கிறிஸ் தவ விசுவாசமாகும்.

இயேசு பாலனை தீவனத் தொட்டியில் கிடத்தி இவர்தான் உலகம் உய்வதற்கென இறைவன் தந்த உணவு என அடையாளம் காட்டினார் அன்னைமரியா. அன்னை மரியாவின் தூண்டுதலால் கானாவில் தண் ணீரை இரசமாக மாற்றினார் இயேசு (யோவா 2:1-11). இவ்வாறு தம் வல்லமையை முதன் முதலில் வெளிப்படுத்திய புதுமை நற்கரு ணையோடு தொடர்பு கொண்டதே. அப்பம் பலுகுதல் நிகழ்ச்சி மக்கள் மீது இயேசு கொண்ட பரிவை வெளிப்படுத்துகிறது (மாற் 6:34). பாடுகளை ஏற்பதற்கு முன்னதாகத் தம் சீடர்களோடு குடும்பமாகப் பாஸ்கா விழா வில் உறவுப் பிணைப்பில் அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலாகவும் இரத்த மாகவும் மாற்றுகிறார். கையளிக்கும் உட லாக (லூக் 22:19), சிந்தப்படும் இரத்தமாக (மாற் 14:24) தம்மை அர்ப்பணிக்கிறார். அருட்சாதனமாக மாற்றுகிறார். தொடர்ந்து கொண்டாடும்படி கட்டளையிடுகிறார். உயிர்த்த பிறகு நற்கருணைப் பகிர்வின் மூலமாக எம்மாவு சீடர்களுக்கு தம்மை வெளிப்படுத் துகிறார் (லூக் 24:30-31). இவ்வாறு நற் கருணை பற்றிய சிந்தனை இயேசுவின் வாழ்வில் திடீரென உதயமானதொன்று அன்று. அவரது பிறப்பிலிருந்து விண்ணேற் றம் வரை பல்வேறு கட்டங்களில் மறை முகமாகவும் வெளிப்படையாகவும் அறிவிக் கப்பட்டது. பெத்லேகேமில் அடையாளம் காட்டப்பட்டு, கானாவில் அறிமுகப்படுத் தப்பட்டு, கப்பர்நகுமில் பிரகடனப்படுத்தப் பட்டு, ஜெருசலேமில் நிறைவேற்றப்பட்டு, எம்மாவுவில் கொண்டாடப்பட்டது.

(7ம் பக்கம் பார்க்க...)

## எமது இதயத்தை ஆண்டவருடைய இதயமாக மாற்றுவோம்

கத்தோலிக்க திருச்சபையானது ஒவ் வொரு வருடமும் யூன் மாதத்தை ஆண்ட வன் இயேசுவின் திரு இருதயத்துக்கு என அர்ப்பணம் செய்து ஒவ்வொரு கிறிஸ்தவனும் இம் மாதத்தில் விசேஷவிதமாக திரு இருதய வணக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு இருதய பக்தியின் ஊடாக எமது இதயத் தையும் ஆண்டவர் இயேசுவின் இதயத்தை போல் மாற்ற வேண்டும் என்றும் ஆசித்து நிற்கின்றது.

அன்பின் உறைவிடம் இதயம், பாசத்தின் பிறப்பிடம் இதயம், தியாக பகிர்வு ஊற்றெ டுக்கும் இடம் இதயம். அதனால் தான் இயேசுவின் அன்பை சுவைக்க, இயேசுவின் பாசத்தை நாம் அனுபவிக்க, இயேசுவின் தியாகத்தையும், பகிர்வையும் எமது வாழ் வாக்க அவருடைய திரு இருதயத்தை குறித்து நாம் தியானம் செய்கின்றோம். இயேசுவின் அன்பு சொல்லில் மட்டுமல்ல செயலிலும் வெளிப்பட்டமையால் தான் இயேசுவின் திரு இருதயம் குறித்து நாம் தியானிக்கவும் அவ் இருதயத்தில் காணப்படும் பண்புகளை நாம் கொண்டு வாழவும் அழைக்கப்படுகின்றோம்.

"நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்" (மத்-11:29) என்று கூறிய ஆண்டவன் இயேசுவின் திரு இருதயத்தைப் பார்த்து நாம் ஒவ்வொருவரும் விசுவாசத் தோடும் நம்பிக்கையோடும் செபிக்கின்றோம் என்று சொன்னால் எமது இதயம் ஆண்டவரு டைய இதயம் போல் மாறவேண்டும். ஆண்ட வன் இயேசுவின் இதயம் தன்னகத்தே கொண்டிருந்த அன்பு, தாழ்ச்சி, கனிவு, சாந்தம், பகிர்வு, மன்னிப்பு, பரிவு போன்ற கிறிஸ் தவ மதிப்பீட்டிற்குரிய உன்னதமான பண்புகள் எம்முடைய இதயத்தின் ஆழத்தில் இருந்து வெளிப்படவேண்டும். "என்னுடைய இதயத் தையும் உம்முடைய இதயம் போல் ஆக்கிய ருளும்" என்று நாம் சொல்லுகின்ற செபம் எம்முடைய அன்றாட வாழ்வில் எம்மோடு இரண்டறக்கலந்து ஆன்மாவின் ஆழத்திற் குள் ஊடுருவி என்னையும் ஒரு கிறிஸ்து வாக மாற்ற வேண்டும்.

இறைமகன் இயேசுவின் இதயம் கொண்டிருந்த மிக உன்னதமான உயர்ந்த பண்பு அன்பு ஆகும். அவர் எம்மை நிறை வாக அன்பு செய்தார். இறுதிவரை அன்பு செய்தார்(யோவான்-13:1). அவரது அன்புக்கு அடைக்கும் தாள் இல்லை, எல்லை இருக்க வில்லை, அளவு இருக்கவில்லை, ஆழம் அகலம் நீளம் காண முடியாததாய் இருந்தது. பாவிக ளையும் இறையாட்சிக்கு எதிரானவர் களையும் மன்னித்து ஏற்றுக்கொண்டு அன்பு செய்யும் அளவிற்கு மிக பெரிய பரந்த இத யம் இயேசுவின் திரு இதயமாகும். தன்னை மிகக் கொடூரமாக துன்புறுத்தி கேவலமான சிலுவை மரணத்தை அவருக்கு கொடுத்த கொடிய யூதர்களை சிலுவை மரத்திலே உயிர் விடுகின்ற இறுதிக் கணத்திலே அவர் களை மன்னிக்கும் படி வானகத் தந்தையிடம் மன்றாடுவதை நாம் காண்கின்றோம் (லூா 23:34)

அது மட்டுமல்லாமல் தன்னுடைய அன்புத்தாயை எங்களுக்கும் தாயாக தரு கின்ற அளவிற்கு மக்களை நிறைவாக அன்பு செய்த இதயத்தை கொண்டவராக இயேசு விளங்குகின்றார்.

### எமது இதயம் மாறவேண்டும்

நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலில் இருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையான இதயத்தைப் பொருத்துவேன் (எசே 36:26 ). என்ற இறைவார்த்தை எம்மில் நிறைவேற வேண்டு மாக. இருந்தால் நாமும் எமது இதயத்தை இயேசுவிடம் காணப்பட்ட பண்புகளை கொண்ட இதயமாக மாறவேண்டும். இயேசுவின் இதயத்தில் காணப்பட்ட எல்லையில்லாத இரக்கமும் பரிவும் தான் நயீம் பட்டணத்து விதவைத்தாயின் மகனுக்கு உயிர் கொடுத் தது ( லூக் 7:11-17) மார்த்தாள் மரியாள் குடும்பத்தின் மீது இயேசுவின் இதயம் கொண்ட பாசமும் பரிவும் தான் அவர்களுடைய சகோ தரனான இலாசருக்கு வாழ்வு கொடுத்தது (யோவான் 11: 38-44) தன்னுடைய போதனை களை கேட்க வந்த மக்கள் கூட்டத்தின் மீது ஆண்டவன் இயேசுவின் இதயம் கொண்ட கருணையும் இரக்கமும் தான் ஐந்து அப்பங் களையும் இரண்டு மீன்களையும் பலுகச் செய்து அவர்களுடைய பசியை ஆற்றியது ( லூா 9:10-17 ) கண்ணீரையும் துயரையும் கண்டு உள்ளம் குமுறியவர் நம் ஆண்டவர் அபரிமிதமான பரிவுள்ளம் கொண்டவர் நம் மீட்பர். அவருடைய இதயத்தைப் போல நமது இதயமும் பரிவு கொண்ட இதயமாக மாறவேண்டும்.

### திரு இருதய பக்தியின் மேன்மை.

திரு இருதய பக்தியை புனிதமாக முன் னெடுப்பவர்களுக்கு வாழ்வுக்கு தேவையான அருள்வரங்கள் வழங்கப்பட்டு அக் குடும் பங்களில் அமைதி வாழ்வு நிலவுவதோடு அனைத்து துன்பங்களிலிருந்து பாதுகாக்கப் படும் என்றும் வாழ்வின் இறுதிக்கட்டங்களில் அடைக்கலமாக இருந்து அனைத்து முயற் சிகளிலும் வெற்றி கிடைக்கும் என்றும்பாவிகள் மனந்திரும்பி ஞானவாழ்வுக்குள் வருவதோடு புண்ணிய நெறியில் வாழ்வார்கள். தொடர்ந் தும் முனைப்போடு வாழ வழிகாட்டப்படும் என்றும் திருஇதயப்படம் ஸ்தாபிக்கப்பட்டு வணக்கம் செய்யப்படும் வீடுகள் விசேஷ விதமான அருட்பொழிவு பெற்றுக் கொள்ளும் என்றும் தொடர்ந்து ஒன்பது வெள்ளிக்கிழமை கள் தேவநற்கருணை உட்கொண்டு வரு பவர்கள் அனைத்து அருட்சாதனங்களையும் பெற்று நன் மரணம் அடைவர் என்ற வாக் குறுதிகள் உள்ளிட்ட பன்னி ரண்டு உறுதி மொழிகளை புனித மார்கரீத் மரியா வழியாக நம் ஆண்டவர் அருளியுள்ளார்.

### இயேசுவின் திரு இருதயம்

இயேசுவின் திரு இருதயத்தில் முள் முடியையும் நெருப்பையும் திருச்சிலுவை யையும் காணுகின்றோம். இயேசுவின் அள வற்ற அன்பின் அடையாளம் தான் சிலுவை. பற்றி எரியும் அன்பின் மத்தியில் நாம் சிலுவையைப் பார்க்கின்றோம். ஈட்டியால் காயப் பட்ட குருதி திறக்கப்பட்ட இயேசுவின் திரு இருதயத்தை நாம் நிறைவாக அன்பு செய்து எமது இதயத்தையும் அவருடைய இதயம் போல் மாற்றி ஆறுதல் கொடுப்போம். சாந்த மும் தாழ்ச்சியும் உள்ள அவரது இதயத்திற்கு வணக்கம் செலுத்தி அருள் வளங்களை நிறைவாகப் பெற்று வாக்குறுதிகளை எமதாக்குவோம்.

*"இயேசுவின் மதுரமான இருதயமே எங்கள் சிநேகமாய் இருக்கும்"*

இ. அ. அமலரட்ணம்
பேராலயம்.

## ரணங்கள் புதிதல்ல

சமுதாயத்தை நிறம்
தீட்டிக் கொண்டிருந்த...
வரலாறுகள் - இப்போது
கரி பூசுகின்றன!

அறியாமைக் கதிர்கள்
நீண்டு வளருவதால்
முறைமாறிப் போகிறது
மனித நேயம்!
உரிமைகள் உறங்கிக்
கொண்டிருப்பதால்....
வன்முறைகள் - எழுந்து
நடக்கத் தொடங்கிவிட்டன!

பசிக்குரல் எழும்பும்
உதடுகளின் அலறல்கள்
யாரின் செவிப்பறைகளையும்
தாக்கவில்லையா...?...
சுதந்திர தாகங்களால் - கட்டிய
கோட்டையின்
கடைசிக் கற்களும்
இடிக்கப்பட்டு விட்டன!

எதிர்காலத்தின் மேனியில்
எவன் கல் எறிந்தானோ...?...
வறுமைக் காயங்கள்
நிறைந்து விட்டன!

நம்பிக்கை இங்கே - இலையாய்
உதிர்ந்து போய்விட்டது!
திரும்பம் வசந்தம் வருமா..?...என
வாழ்க்கை ஏங்கி நிற்கிறது!

வி. முகிலன்
நெடுந்தீவு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.யே.அ.அருள்தாசன்

## பொதுக்காலம் 12ம் ஞாயிறு

"உலகமென்ற கடலிலே, அலை மோதும் படகிலே, இயேசு எம் பக்கத்திலே, துணிவோடு புறப்படுவோம் ஓடத்திலே"

"அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்தது. அலைகள் படகின்மேல் தொடர்ந்து மோத, அது தண்ணீரால் நிரம்பி கொண்டிருந்தது. அவரோ படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர்கள்," போதகரே, சாகப் போகிறோமே! உமக்குக் கவலையில்லையா?" என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து காற்றைக் கடிந்து கொண்டார். கடலை நோக்கி, "இரையாதே, அமைதியாயிரு" என்றார். காற்று அடங்கியது: மிகுந்த அமைதி உண்டாயிற்று."
(மாற் 4: 37- 39)

உலகமென்ற கடலிலே அலை மோதும் படகுகள் போன்று பயணிக்கிற எம் வாழ்வில் புயல்களாகிய சவால்கள் துன்பங்களை அவ்வப்போது சந்தித்து வருகிறோம். இத்தகைய இடர்கள் துன்பங்கள் மத்தியில் சிலர் நிலைகுலைந்து இனி வாழவே முடியாது என்று மாண்டுபோக எண்ணித் தற்கொலை செய்து வாழ்வையே முடித்துக் கொள்வோரும் உண்டு.

இவ்வாறான இடர்கள், இக்கட்டுக்கள், இடைஞ்சல்கள், சவால்கள் துன்பங்கள் என்பன இழப்புக்களாகவோ, ஏமாற்றங்களாகவோ, போரின் தோல்விகளாகவோ, இயற்கைப் பேரழிவுகளாகவோ, விபத்து விபரீதங்களாகவோ, உடல் நோய்களாகவோ, வறுமைப் பிணியாகவோ, உயிராபத்தின் பேரச்சமாகவோ அமையலாம்.

இவற்றின் கோரப்பிடியின் மத்தியில் நிலைகுலையாமல் தெய்வம் நமக்குத்துணை என்று இறைநம்பிக்கையை இறுகப்பிடித்து, இடம்பாடுகள் நிரந்தரமானவையல்ல மாறாக தற்காலிகமான வெறும் தோற்றப்பாடுகளே. இவற்றை என்னால் வெல்ல முடியுமென்ற தன்நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வாழ முற்படுவோம். நல்லன நடக்குமென்ற எதிர்நோக்கோடு வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களுக்கு வாழ்வு என்றும் பசுமையான சொர்க்க வாயிலாகும்.

தற்கால யுகத்தில் அகில உலகமெங்கும் துன்பத்தின் பிடியானது மனிதனை முன் எப்போதுமில்லாதவாறு வருத்துவது வெளிப்படையாகத் துலங்குகிறது. மானிட உயிரின் மாண்பு மதிப்பற்ற செல்லாக் காசாகியுள்ளது. கொள்ளையும், படுகொலைகளும் மலிந்து விட்டன. பிணங்கள் வெறும் சில்லறைக் காசுகள் எண்ணப்படுவதுபோல எண்ணப்படுகின்றன. நீதிக்கான வரைவிலக்கணமும் மாறிப்போய் வலிமையும், அதிகாரமும், பலமும், பணமும் உடையவர் செய்வதே நீதியானது என்றாகிவிட்டது. அடிமைகள் இன்னும் அடக்கப்படும் வேளையில் துன்பத்தில் துவண்டு வெறுமையையே நிரந்தர உடைமையாக்கி வாழ்வோர் பலர் நம்பிக்கையிழந்து, இறைவனின் இருப்பில் ஐயம் கொண்டு, இறைவனைச் செயலற்றவராகவும், பலமற்றவராகவும் காணும் அபாயத்தில் இருப்போர் உள்ளத்தில் விசுவாச ஒளியேற்றுவதே எமது தலையாய ஒப்பற்ற கிறிஸ்தவ கடமையாகும்.

"இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத்தகுதியற்றவை." (உரோ 8: 18) இயேசுவுடன் படகில் பயணித்த அவரின் சீடர் கிறிஸ்து இறைமகன் தம்மோடு இருப்பதை விட இயற்கையின் அற்ப சீற்றத்தையே பெரிதுபடுத்திக் கலக்கமடைந்தனர். அதுபோலவே எமது மானிட வாழ்விலும் நாமும் இயற்கையையும், மனிதர்களின் சக்தியையும் மிகைப்படுத்தி, கடவுளின் வலிமையை எமது விசைசக்கரங்களால் பல தடவைகளில் காணத்தவறுகிறோம்.

கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பட்ட இறைவார்த்தை இயற்கையின் சக்தியையும் விட வலிமைமிக்கது என்பதை படகில் பயணித்த இயேசு புயலை அடக்கிய நிகழ்வின் மூலம் எண்பித்தார். இறைவன் முன்னிலையில் அவரது மாட்சிக்கும், வலிமைக்கும் எதுவுமே இணையற்றது. பழைய ஏற்பாட்டில், நினிவே மக்களுக்கான மனமாற்றத்தின் செய்தியை அறிவிக்குமாறு இறைவனால் அனுப்பப்பட்ட யோனா, அவ்வழைப்பிலிருந்து மாறுபட்டவராகச் சென்ற போது கடற்கொந்தளிப்பிற்கு உட்பட்டு அதிலிருந்து மீண்டு சென்று, நினிவே மக்களுக்கு மனமாற்றத்தின் செய்தியை அறிவித்ததுபோல புதிய ஏற்பாட்டின் புதிய யோனாவாக இறைவனால் அனுப்பப்பட்ட இயேசுவும் கடற்கொந்தளிப்பின் பின் இறையாட்சியை கெனசேயர் பகுதியிலே அறிவித்தார். வாழ்க்கைச் சவால்களின் மத்தியில் இறைவன் எம் சார்பாய் செயற்பட்டு எம்மை விடுவித்து எம்சார்பாய் செயற்படுவதில் நம்பிக்கை கொள்வோம்.

வாழ்வின் இலக்கு நோக்கிய பயணத்தில் தளர்ந்து வீழ்ந்து விட்டாலும், வீறு கொண்டு எழுந்து நின்றால் இமயமும் எம் தோளுக்குக்கீழேதான். தன்நம்பிக்கையையும், இறை நம்பிக்கையையும் இரு இறக்கைகளாகக் கொண்டு பறந்த வானில் உயரப்பறந்தால் உலகமே எமக்குக் கீழ்ப்பட்டதுதானே.

## பொதுக்காலம் 13ம் ஞாயிறு

"வாழ வேண்டுமென்ற ஏக்கத்தில் சாவை எண்ணித்தினமும் செத்துப் பிழைத்து கொண்டிருப்போர் ஏராளம்."

"சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், "தலித்தாகூம்" என்றார். அதற்கு, சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு' என்பது பொருள். உடனே அச்சிறுமி எழுந்து நடந்தாள்..." (மாற் 5: 41,42)

சாவை முன்னிட்டு அஞ்சாதவன் எவருமே இல்லை எனலாம். சாவு எவ்வளவு கொடியது என்றால் அதை முன்னிட்டு அனைவருமே, எப்போதும் அஞ்சி நடுங்குகின்றனர். ஒரு முறை மட்டும் சம்பவிக்கும் சாவை முன்னிட்டு வாழ்நாளெல்லாம் செத்துச் செத்துப் பிழைப்பவர் வாழ்வில் நிம்மதியிழந்து நிர்க்கதிக்குள்ளாகிறார்.

இறைமகன் கிறிஸ்து சாவின் மீது அதிகாரம் கொண்டவராக சாவை வாழ்வாக்கும் சகல வல்லமை படைத்தவராயினும், இறந்த யாயீர் மகள், விதவையின் மகன், மற்றும் லாசர் முதலியோரை உயிருடன் எழுப்ப வல்லவரானாலும், பாவத்தின் விளைவான சாவை வெற்றி கொள்ள இறைமகனே அச்சாவிற்கு உட்பட வேண்டியிருந்தது.

வேதாகமத்தின் தொடக்க நூலில் படைப்பு வரலாறு சொல்லப்படுகிறது. அதில் பாவம் எவ்வாறு மனித குலத்தைப் பாதித்தது என்றும் சொல்லப்படுகிறது. சாவு பாவத்தின் விளைவாக உருவெடுத்தது. ஆனால் கடவுள் இச்சாவைப் படைக்கவில்லை ஆயினும் பாவத்தின் விளைவாகவும் அப்பாவத்தின் முடிவாகவும் சாவை கடவுளே அனுமதித்தார். ஒருவரில் பாவம் நித்தியத்திற்கும் அக்கிரமத்தின் ஆதிக்கத்தைச் செலுத்தாமல் முற்றுப்புள்ளியாக சாவு அமைந்துள்ளது.

"சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை; வாழ்வோரின் அழிவில் அவர் மகிழ்வதில்லை. கடவுள் மனிதர்களை அழியாமைக்கென்று படைத்தார்; தம் சொந்த இயல்பின் சாயலில் அவர்களை உருவாக்கினார். ஆனால் அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. அதைச் சார்ந்து நிற்போர் இறப்புக்கு உள்ளாவர்." (சா. ஞா. 1:13,23,24)

ஆகவேதான் கிறிஸ்து தனது சிலுவைச் சாவின் மூலம் சாவை முறியடித்து உயிர்ப்பினால் சாவை வெற்றி கொண்டு தம் உயிர்ப்பிலே நாமும் பங்கு பெறச் செய்தார். கடவுள் நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாக கூடுதல் நன்மைகளைச் செய்து வருகிறார். கடவுளின் அருளையும் வல்லமையையும் வரையறைக்கு உட்படுத்த முடியாது. எவ்வாறெனில் யாயீரின் மகளின் நோயிலிருந்து மட்டுமே இயேசு அவரை விடுவிக்க முடியுமென யாயீரின் ஆட்கள் எதிர்பார்த்த வேளை இயேசு இறந்த மகளையே உயிருடன் எழுப்பினார்.

இறைவனின் வல்லமை மிகு அரும்பெரும் வல்ல செயல்கள் வெளிப்பட இறைவன் மீது நாம் எம் நம்பிக்கையின் கண்களை ஆழமாகப் பதிக்க வேண்டும். இறை நம்பிக்கையைக் கருவியாக்கி உறுதியுடன் பற்றிக் கொள்ளும் போது வாழ்வில் வியத்தகு வல்லமை செயல்கள் நிகழும் என்பதற்கு யாயீரின் மகளின் உயிர்ப்பும், இரத்தப் போக்குடைய பெண் இயேசுவைத் தொட்டதாலான நலமும் நற்செய்தி தரும் உண்மை பாடமும்.

"அவர்கள் சொன்னது இயேசுவின் காதில் விழுந்ததும், அவர் தொழுகைக் கூடத் தலைவரிடம், "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என்று கூறினார்." (மாற் 5: 36)

தொடர் அவலங்கள், அடக்கு முறைகள், அனர்த்தங்கள் எம் உள்ளங்களை நெகிழச் செய்து, காயப்படுத்துவதோடு எம்மை உயிருள்ள நடைபிணங்களாக்கும் அபாயத்தை நாம் அன்றாடம் எதிர்கொள்ள வேண்டிய துரதிஷ்ர வசத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலையில் எம் நம்பிக்கையை எல்லாம் நாம் ஆண்டவரிடமே வைப்பதை விட வேறு வழியில்லை.

"உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர், ஆண்டவரை நோக்கி, 'நீரே என் புகலிடம்; என் அரண்; நான் நம்பியிருக்கும் இறைவன்' என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்." (தி.பா. 91:1-3)

தெய்வம் நமக்குத் துணை ஆகவே சருகாய் நீயும் செத்தவன் போல கிடந்து விடாது சரித்திரம் படைக்க நிமிர்ந்து நில். தடைகளாகிய தடைக்கற்களைக் காலால் மிதித்து இறை நம்பிக்கையோடு கூடிய தன்நம்பிக்கையையும் வலிமையாகக் கொண்டு மேல் நோக்கி எப்போதும் உயர்ந்து செல், துணிந்து நில், வீறு கொண்டு செல்.

---

# தவலன் கண்மணிகள்

## சிந்தனைத் துளிகள்

★ உண்மைக்காக வாழ்வதால் துன்பங்கள், துயரங்கள் வந்துவிடும் என்பதற்காக, போலி வாழ்வு வாழாதே. நிலைத்து நில்லாத இவ்வுலக வாழ்வை விட நிலைத்து நிற்கும் மறுவுலக வாழ்வை தெரிந்தெடு.

★ நீ கண்ணீர் விடுகின்ற போது உனக்கு அருகிலிருப்பவனுக்கு ஆறுதல் அளிக்கமுடியாது. நீ கண்ணீர் விட்டு ஜெபித்தால் அது மற்றவர்களுக்கு பயனளிக்கும்.

★ நீ மற்றவர்களுக்கு நன்மை செய்ய விரும்பினால், அவர்கள் உன்னிடம் என்ன நன்மை எதிர்பார்க்கின்றார்களோ, அவற்றை செய்யத் தயங்காதே.

★ பொய்மையில் வாழ்பவனுடைய வாழ்க்கையில் புகழ் நீடிப்பதில்லை. உண்மைக்காக வாழ்பவனுடைய வாழ்வில் புகழ் உயருமே தவிர குறையாது.

செ. ஜூலியானா
புனித யுவானியார் ஆலயம்,
யாழ்ப்பாணம்.

## பெற்றோரைப் போற்றுவோம்

| | | | |
|---|---|---|---|
| பத்துமாதம் | சுமந்தெடுத்தவள் | பாசமுடன் | பெற்றெடுத்து |
| பாலூட்டி | தாலாட்டி | பாசத்துடன் | வளர்த்தெடுத்து |
| பாதுகாக்கும் | போற்ற | நினைத்தவரும் | அன்னையை |
| பாராட்டும் | பெற்றாயல் | யாரும் | இருப்பாரோ? |
| நாட்டிலே | நல்லதொரு | பிள்ளையாய் | நாமுயர |
| நாளும் | பொழுதும் | தம்பணி | மறந்து |
| சுற்றமுடன் | கூடிய | கண்ணியம் | காத்திருப்பாரே |
| கேட்டுமே | தந்தையை | நினைவும் | போற்றுவோம் |
| வறுமை | வந்தபோதும் | வாடி | வதைந்தாலும் |
| பொறுமையாய் | எமக்குணவு | ஊட்டி | உயிரளித்து |
| துன்பத்தில் | இன்பத்தை | நாள்தோறும் | எமக்களிக்கும் |
| பெற்றோரை | எப்போதும் | நன்றியுடன் | போற்றுவோம் |
| போற்றுவோம் | போற்றுவோம் | பெற்றோரைப் | போற்றுவோம் |
| ஆற்றுவோம் | அவர்கட்கு | எம்பணிகள் | ஆற்றுவோம் |
| ஏற்றுவோம் | அவர்புகழ் | ஏற்றி | போற்றுவோம் |
| மாற்றுவோம் | பெற்றோரைப் | போற்றாத | மனிதர்களை |

ம. நிர்மலா நிர்மலன்
புனித பத்திரிசியார் கல்லூரி

## மாறவேண்டும்

மரியாள் போல அம்மாமார் மாறவேண்டும்
சூசையப்பர் போல அப்பாமார் மாறவேண்டும்
இயேசுபாலன் போல பிள்ளைகள் இருக்கவேண்டும்
நாள்தோறும் கடவுளை நாம் வணங்கவேண்டும்.

ம. பிறின்சியா லீமா
யா/ கன்னாகம் றோ.க.த.க. பாடசாலை

## முடிந்தால் முயன்று பாருங்கள்

கடந்த வார புதிரின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | லே | சி | யா | டா | து | யா | கு |
| கு | ன் | ரி | ள | க் | ஸ் | வெ | னா |
| வை | சி | [illegible] | ளா | ர | பி | [illegible] | ன் |
| த் | வி | னி | யா | [illegible] | ரா | க் | ல் |
| ச | பூ | ர் | ரா | வி | ல் | ரே | ஜே |
| ரி | பா | [illegible] | னா | ஜ | ஸ் | யா | ர் |
| லி | யா | தி | ந் | இ | பி | னா | ம |
| சி | இ | த் | தா | லி | கு | டா | ன் |

| | |
|---|---|
| மலேசியா | பாகிஸ்தான் |
| குவைத் | ஜேர்மன் |
| சிரியா | இஸ்ரேல் |
| கனடா | ஈரான் |
| கியூபா | ஈராக் |
| நியூஸிலாந்து | சீனா |
| சிலி | பெரு |
| இந்தியா | ரஷ்யா |
| இத்தாலி | லிபியா |
| சூடான் | பிரான்ஸ் |

ஜெரோம் ஜாட்சா
குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாடல் மூலம் செபித்தல்

அருட்பணி.
மா. றேஜீஸ் இராசநாயகம்

இந்த உரையாடல் ஒருவர் தனது நண்பரோடு பேசுவதுபோல், அல்லது ஒரு வேலைக்காரன் தன் எசமானோடு பேசுவதுபோல் அமையும். ஒருவேளையில் ஓர் அருட்கொடையை அல்லது உதவியை வேண்டுவதாக, மற்றொரு வேளையில் ஒரு தவறான செய்கையையிட்டு தனது குற்றத்தை ஏற்றுக் கொள்வதாக, அல்லது தனது செயற்பாடுகளை எடுத்துக்கூறி அவை குறித்து ஆலோசனை கேட்பதாக அமையலாம்.

- புனித லொயோலா இஞ்ஞாசியார்

மனச்செபம் என்பது நண்பர்களுக்கிடையில் நிகழும் உள்ளார்ந்த பகிர்தலேயன்றி வேறல்ல என்பது எனது கருத்து.

- புனித அவிலா திரேசம்மாள்

செபத்தில் அலங்கார வார்த்தைகளோ சொற்றொடர்களோ அவசியமில்லை. சிறப்பான மொழிநடை அதற்கு தேவையில்லை நண்பர்களின் உரையாடல்களில் சிறிய விடங்கள் என்று ஒன்றுமில்லை. ஒரு விடயம் உங்களுக்கு மகிழ்ச்சியை அல்லது துக்கத்தைத் தருமானால், அது எவ்வளவு சிறிதாயிருப்பினும் ஆண்டவர் அதைக் கேட்க விரும்புகிறார். இறைவனுக்குத் தெரியும் தானே என்று நினைக்க வேண்டாம். உங்கள் எண்ணங்களை அவரோடு பகிர்ந்து கொள்வதுதான் முக்கியம்.

ஒருவர் தன் நண்பரோடு பேசுவதுபோல் ஆண்டவரோடு பேசுங்கள். ஆசீர்வாதங்களையும் அருட்கொடைகளையும் கேளுங்கள். உங்களுக்கோ, உங்கள் நண்பர்களுக்கோ, உலகுக்கோ தேவையானவற்றைக் கேளுங்கள். உங்கள் செயற்பாடுகளையும் ஈடுபாடுகளையும் அவரோடு பகிர்ந்து கொள்ளுங்கள். சொல்ல வேண்டுமென்று உங்கள் மனதிற்குத் தோன்றுவதை மனந்திறந்து கூறுங்கள்.

முடிவில் மௌனமாக இருந்து உற்றுக்கேளுங்கள். உங்கள் உள்ளத்தில் ஆண்டவர் பேசுவார். அதற்குச் செவிகொடுங்கள்.

எந்த உரையாடலிலும் உள்ளது போல இதிலும் இடை வெளிகள் இருக்கலாம். ஒன்றாயிருக்கும்போது உரையாடலின் உச்சக்கட்டம்.

# இறைவனுடைய திட்டத்தின் மீது நம்பிக்கை வைத்தல்


அருட்பணி மா. றேஜீஸ் இராசநாயகம்

முதலில் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் பொதுவாக செயற்படுகிறார் என்பதில் நம்பிக்கை வையுங்கள். நாம் எல்லாவற்றிலும் தாமதமின்றி உடனடியாக முடிவு காண வேண்டுமென நினைத்து பொறுமையிழந்து விடுகிறோம். ஆனால் உறுதியற்ற பல படிநிலைகளூடாக நீண்ட காலம் எடுத்துத்தான் முன்னேற்றம் கிடைக்கிறது என்பது தான் இயற்கை நியதி. இதற்கு பல உதாரணங்களை நாம் கூறலாம்.

உங்கள் நிலையும் இது போன்றுதான் என்று நினைக்கிறேன். உங்கள் யோசனைகள் படிப்படியாகவே முதிர்ச்சி அடைகின்றன. அவை வளர்ச்சியடையட்டும். அவசரமில்லாமல் அவை மெதுவாக உருப் பெறட்டும். காலம் நாளைக்கு உங்களை என்ன விதமாக ஆக்கப் போகின்றதோ அதை இன்றைக்கே அடைய வேண்டும் என்பது போல் (அதாவது இறையருளும் சந்தர்ப்ப சூழ்நிலையும் உங்கள் நல்லெண்ணத்துக்குத் துணை நிற்குமானால்) அவற்றைப் பலவந்தமாக முன்னெடுக்க முயற்சிக்க வேண்டாம்.

உங்களுள் உருவாகும் இந்தப் புதிய ஆவல் எத்தகையதாயிருக்குமென்று இறைவன் மட்டும் அறிவாற்றல் இறைவனது கரம் உங்களை வழி நடத்துகிறது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கட்டும். முழுமை பெறாமல் அந்தரத்தில் இருப்பது போன்ற உணர்வு உங்களுக்கு கவலையைத் தரலாம். அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தவிர்க்க முடியாததோ அதை ஏற்று வாழப் பழகவேண்டும். இறைவனின் துணையை நாட வேண்டும்.

# நல்ல ஆயனே! அருட்தந்தையே! மக்கள் உயிர்காத்த சரத்ஜீவனே!!



நண்பனுக்காய் உயிரைக்கொடுக்கும்
உன்னத அன்பேனும்
பண்பு போல் ஏதுமில்லை
என்றே முழங்கிட்ட
நற்பரன் யேசுவின் இறை
பணிக்காய் பலியாகி – மறைமன
பொற்பதம் சரணடைந்த
பணியாளனே சரத்ஜீவனே

கருவானீர் பொதுக்குருத்துவத்தில்
பாசமிகு மைந்தனானீர்
உருவானீர் பணிக்குருத்துவத்தில்
உன்னத குருவானீர்
அபிஷேகம் பெற்றிட
ஈராண்டு ஆண்டுக்கு...
அர்ப்பணமாக்கினீரே ...
அல்லலுற்ற மக்களுக்காய்

ஆழ்ந்த அமைதி நிலையும்
அடக்கமான சொல்லாற்றலும்
சூழ்ந்த உமது பரிதி முகம்
ஒழுக்கமான பணியாளர்க்
இலக்கணமே
தாழ்மை கொண்டே நீரும்
தந்த பணி மறக்காது
ஏழ்மை உள்ளத்துடன்
உழைத்தீர் உயிர் உள்ளவரை

போர்முரசு ஓங்கிய வன்னி மண்ணிலே
முழு மூச்சுடன் நற்செய்திக்காய்
சோர்வது கொண்டிடாது
சொந்த வேதனைகள் தாங்கியே
பகலிரவு என்றும் பார்க்காது
பரந்த மனதுடனே

பாடுபட்டீர் கிறிஸ்துவிற்காய்
சாட்சியம் பகர்ந்திடவே

உன் அருகினிலே
ஆயிரம் விழட்டும்
உன் வலப்புறத்தில்
பத்தாயிரம் விழட்டும்
எதுவுமுனை அணுகாது
என்ற இறை மொழி நம்பி
அரக்கப் போர் மத்தியிலும்
அரணானீர் மக்கள் விசுவாசத்திற்கு

கொடும் போர் சூழ்ந்து
உயிரை நெருக்கிய போதும்
கடும் பசி வயிற்றை
...நெருக்கிய போதும்
...காட்டிலே
தஞ்சமா... நின் பணி
கொஞ்சமும் பொறுக்கவில்லையோ
பாரினை படைத்தவர்க்கு

முடித்தவரை மக்களது
உயிர்க்காக முனைந்திட்டீர்
மடிந்தவரை மாண்புடனே
இறுதிவழி அனுப்பி வைத்தீர்
விடிவு வரும் என்றும்
விசுவாசத்தில் உறுதிகொண்டீர்
முடிந்தது முற்றுமென்ற
முடிவுடன் சென்றதேனோ

நல்ல ஆயன் என்றுமே
தன் மந்தைகளுக்காய் உயிர் தருவான்
சொல்லால் மட்டுமல்ல இதனை
செயலிலே செய்திட்ட

செயற்கரிய பணியாளனே
பங்கர் வாழ்வும் உங்கள்
பட்டினிச்சாவும் உறுதியாயிற்றே
எங்கள் விசுவாச வாழ்விற்கு

உங்கள் தியாகப் பணி எண்ணி
உளம் வியந்து நிற்கின்றோம்
எங்கள் விழி நீர் தனையே
கரங்களில் ஏந்தியோராய்
அஞ்சலி நாம் செய்கின்றோம்
நெஞ்சம் நிறை வலியோடு
தந்தாய் நீயின் தேவன் பதம் சென்றே
தாய் நாட்டின் அமைதிக்காய்
பரிந்துரைப்பீர்

நின் ஆன்மா இறை அமைதியில்
நிறைவதாக!

S.M. வயோலன்ஸ்
இளவாலை

# சிறுகதை பரம்பரை கிறிஸ்தவர்கள்

கதிரவன் தன் ஒளிக்கதிர்களை விரித்து உறங்கிய உயிர்களை எழுப்பத் தொடங்கினான். டேவிற்றும் தனது ஓலைப்பாயை சுருட்டி ஓரமாக வைத்துவிட்டு, கொட்டாவி விட்டவனாக, ஆரோக்கியம்.... ஆரோக்கியம்.. எழும்பனப்பா! எழும்பி கொஞ்சத் தேத்தண்ணி வை எனக்கு கோயில்லை வேலை இருக்கு பாதர் வரச் சொன்னவர். மனைவியை எழுப்பினான் டேவிற். ஆரோக்கியம்; எழும்பி ஒமோம் வைக்கிறன் என்றவளாக, பானையை அடுப்பில் வைத்து காய்ந்த ஓலையை மூட்டி தேனீர் வைத்தாள். காலைக் கடன்களை முடித்து, தேனீர் குடித்து விட்டு கோயிலுக்கு புறப்பட்டான் டேவிற்.

டேவிற் ஏறத்தாழ ஏழு பரம்பரை கிறிஸ்தவன் ஆரோக்கியமும் அப்படித்தான். இருவரும் நல்ல கடவுள் பக்தி உள்ள கிறிஸ்தவக் குடும்பம். டேவிற்றின் வீட்டிற்கு முன்னால் ஒரு வீடு வெகு காலமாக வெறுமையாக இருந்தது. அதில் பேய் இருப்பதாக ஒரு கதை. அதனால் அவ் வீட்டில் யாருமே குடிவரவில்லை. அன்று காலை ஆரோக்கியம் ஒழுங்கை கூட்டவென வெளியே நின்று கொண்டிருந்தாள். இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து, அம்மா!... வேலாயுதம் மாஸ்ரர் வீடு இதுதானா என்று கேட்டனர். ஆரோக்கியம் ஓம் தம்பி இது தான். நீங்கள் யார்?.. இந்த வீட்டை வாடகைக்கு பார்க்கிறோம்.... கூறி முடிப்பதற்குள் ஆரோக்கியம் தொடர்ந்தாள் தம்பி.. இதிலை... பேய்... வந்தவரில் ஒருவர், எல்லாம் கேள்விப்பட்ட நாங்கள் அம்மா, இதிலை குடிவரப் போறவர் இந்தியாவிலை இருந்து வாற ஒரு பிரபலமான சாமியார். அவருக்கு பேய், பிசாசு, பில்லி, சூனியம் எல்லாம் தண்ணிபட்ட பாடு... மற்றவர் குறுக்கிட்டு இந்தச் சாமியார் சாதாரண ஆள் கிடையாது. பூசைவைச்சு மந்திரம் ஓதினால் புதையலே கிடைக்கும். அப்படிப்பட்டவர், சாமியாரைப்பற்றி அளந்து கொண்டே போனார்கள். கேட்க சகிக்காத ஆரோக்கியம்; சரி தம்பி நான் வாறன். என்று கூறி தனது படலையை அடித்துச் சாத்திக் கொண்டாள். ஆரோக்கியத்திற்கு கிறிஸ்தவ மதத்தை விட வேறு எந்த மதமும் பிடிக்காது. யாரோடு கதைத்தாலும் தான் ஒரு பரம்பரை கிறிஸ்தவள் என்பதை கூற மறுக்கமாட்டாள். தனது பங்கில் மரியாயின் சேனைத் தலைவிதான் ஆரோக்கியம். டேவிற்றும் கோயிலுக்கு தொண்டு செய்யும் ஒருவர். இருவருக்கும் பணம் இல்லை என்ற கவலையைவிட பிள்ளைகள் இல்லை என்ற குறைதான் பெரிதாக வாட்டின. அதற்காக போகாத கோயிலே இல்லை.

அன்று இருவரும் வெளியே செல்ல படலையை திறந்தார்கள். எதிர் வீட்டில் சாமியார் குடிவந்து விட்டார். தடல் புடலாக அந்த இரு இளைஞரும் வேலைகளை செய்து கொண்டிருந்தனர். தற்செயலா ஆரோக்கியத்தைக் கண்டனர். ஹலோ! ஆன்றி சாமியார் வந்துவிட்டார் என புன்னகைத்தனர். அவளுக்கு அவர்களின் புன்னகை வெறுப்பாக இருந்தது. அவற்றை காட்டிக் கொடுக்காதவளாக தானும் புன்னகைத்து, சரி தம்பி வாறன். கூறிவிட்டு டேவிற்றின் சைக்கிளில் ஏறிக் கொண்டாள். சாமியாராம் சாமியாராம்.. கண்டறியாத சாமியார் அவற்றை காவியுடை என்ன, காதிலை பூ என்ன, கள்ளச் சாமி முணுமுணுத்துக் கொண்டாள் ஆரோக்கியம். டேவிற்றுக்கு கோபம் வந்தது. வாயை மூடு ஆரோக்கியம். அவனவன் சமயம் அவனுக்கு பெரிது. எல்லாம் நம்பிக்கைதான். ஆரோக்கியம் தொடர்ந்தாள். நான் மதத்தை குறை சொல்லவில்லை அதை காரணமா வைச்சு ஏமாற்றி பிழைக்கக் கூடாது. சரி..சரி வா நமக்கென்ன, கூறியவாறு டேவிற் ஏதோ ஞாபகத்திற்கு வந்தவனாக.. நான் ஒரு விடயத்தை மறந்திட்டன். ஆரோக்கியம் ஒரு லொத்தர் டிக்கற் எடுத்தனான் அது இண்டைக்குத்தான் கடைசி நாள். போற நாங்கள் அதையும் பேப்பரில பாத்திடுவம். என்று கூறி பாதரின் அறை வீட்டிற்கு சென்றனர். பேப்பரை பார்த்ததும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. முதல் பரிசு 16 லட்சம் திரும்பதிரும்ப பார்த்தான். பாதருக்கும் காட்டினான். பாதருக்கும் ஆச்சரியம் இவ்வளவு காலத்திற்கும் நீ பட்ட கஸ்டத்திற்கு கடவுள் கண்திறந்திட்டார் டேவிற்... டேவிற்றுக்கு ஆனந்தத்தால் கண்ணீர் பெருகியது. ஆரோக்கியத்துக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. இருவரும் பாதரிடம் விடைபெற்று திரேசம்மா கோவிலை நோக்கி ஓடினர். இறைவனுக்கு நன்றி கூற. சில நாட்களில் பணம் கிடைத்தது டேவிற் வீடுகளை கட்டியது. சொகுசான வாழ்க்கை, சொந்தபந்தம் எல்லாம் தேடி வந்தன. சாமியார் முன் வீட்டில் வந்த பின் தான் தாம் இந்த நிலைக்கு வந்திருக்கினம் என இருவர் மனதிலும் ஒரு எண்ணம். சாமியாரிடம் அடிக்கடி போய் வந்தனர். இருந்தும் டேவிற மனதில் ஒரு பயம். ஆரோக்கியம் நாங்கள் சாமியாரிட்டை போற விடயம் யாருக்கும் தெரியக் கூடாது கண்டியோ... பாதருக்கு போய் அள்ளி வைச்சிடுவாங்கள்.... ஓமோம் பிறகு இவள் மரியம்மா மரியாயின் சேனைக்கு தலைவியா வாறதுக்கு தலை கீழாய் நிற்கிறாள். இதைச் சாட்டா வைச்சு என்னை தட்டிப் போட்டு தான் தலைவியா வந்திடுவாள். அவளுக்கு என்னிலை சரியான பொறாமை. எதுக்கும் நாங்கள் கவனமாக இருக்க வேணும்.

டேவிற்றுக்கு பணம் கிடைத்ததால் இருக்குமிடம் தெரியாமல் போனது. கோயில் பக்கம் போவதைக் குறைத்துக் கொண்டான். சாமியாரின் சீடர்கள் இருவர் மனதையும் நன்றாக மாற்றிவிட்டனர். திரேசம்மா கோயிலே தஞ்சமென்று இருந்த ஆரோக்கியம் சாமியார் வீட்டில் தஞ்சமடைந்தாள். அவளுக்கு பிள்ளைகள் இல்லை என்ற கவலையைத் தவிர வேறு எந்த கவலையும் இல்லை.

அன்று வெள்ளிக்கிழமை பிள்ளை வரம் வேண்டி டேவிற் வீட்டில் பெரிய மந்திரப் பூசை ஏற்பாடாகி இருந்தது. குமஞ்சான் புகை வீட்டையே மறைத்தது. ஆரோக்கியம் சாமியார் வந்துவிட்டார் பூசைக்குரிய சாமான்களை நடுவீட்டில் வை... டேவிற்றின் குரல் கனமாக ஒலித்தது. தடல் புடலாக பூசை ஆயத்தங்கள் நடந்தன. சாமியார்: உங்களிடம் உள்ள பூசை சாமான்களோடு பணம், நகை, எதையும் மறைத்து வைக்க வேண்டாம். பூசையில் வைக்க வேணும் அப்போது தான் அருள் கிடைக்கும். சாமியார் தனது குறிக்கோளின் முக்கிய கட்டத்தை வெளிப்படுத்தினார். சரி சரி எல்லாம் நடுவீட்டில் வைத்தாயிற்று..... இனி.... டேவிற் முடிப்பதற்குள் சாமியார் தொடர்ந்தார். நான் சென்ன மாதிரி காச்சிய பாலைக் கொண்டு வாங்கோ இருட்டில் வைச்சு மந்திரிக்க வேண்டும். பாலைக் கொடுத்தாள் ஆரோக்கியம். சரி சரி இருவரும் நடுவீட்டில் இருங்கோ சாமியார் மந்திரிச்ச பாலை கொடுத்து விட்டு கண்களை மூடும்படி கூறினார். இருவரும் மூடி விட்டனர். பூசை தொடங்கி விட்டது. சாமியார் மந்திரிக்க தொடங்கி விட்டார். இருவரும் சாமியாரின் மயக்க மருந்து பாலை குடித்ததும் மயங்கி விட்டனர். சாமியாரின் வேசம் கலைய ஆரம்பித்தது. சீடர்களுடன் தனது வேலையை ஆரம்பித்தார்.

பணம்; பொருள், நகை எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு இரவோடு இரவாக மூவரும் ஓடிவிட்டனர். விடிந்து மயக்கம் தெளிந்த டேவிற், ஆரோக்கியம் இருவருக்கும் அதிர்ச்சியும் அவமானமும் தாங்கமுடியவில்லை. வீடு வெறுமையாக காட்சியளித்தது. ஆரோக்கியம் தலையில் கைவைத்தபடி கடவுளே! போலிச்சாமியை நம்பி நாங்கள் மோசம் போய்விட்டமப்பா... அழுதாள் ஓடிச் சென்று சாமியார் இருந்த வீட்டைப் பார்த்தாள். சாமியார் கும்பல் வீட்டை காலிபண்ணி விட்டு ஊரைவிட்டு ஓடிவிட்டனர். டேவிற்றிற்கு தலையே சுற்றியது. இருவரும் பாதரிடம் சென்றனர். நடந்தவற்றை கூறி மன்னிப்பு கேட்டனர். பாதருக்கு எதுவுமே கூற முடியவில்லை; சுதாகரித்தவராக கவலைப்படாதேயுங்கோ! எப்பவும் இருப்பதை வைத்து திருப்தி அடைய வேண்டும். கடவுள் நம்பிக்கையை தளர விடக்கூடாது. பரம்பரை கிறிஸ்தவர்களாக இருந்தும் அவநம்பிக்கையால் சாத்தான் இருவரையும் குழப்பிவிட்டான். இனி யாவது இறைநம்பிக்கையுடன் வாழுங்கள் என்று ஆறுதல் கூறி இருவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

(யாவும் கற்பனை)

திருமதி. கில்டா-ஜெகதீசர்,
பேக்கரி லேன்.

# விஞ்சிவிட்டாய் உன் பணியில்

அழைத்தலுக்கு இலக்கணம் தந்த
ஊழியனே,
நீயொரு பிந்திய அழைப்பு –
இருந்தாலும்
விஞ்சிவிட்டாய் உன் பணியில்
அழைப்பும் பெற்றாய் வன்னிக்கு
கருத்தாய் செய்து முடித்தாய் உன்
பணியை,
வன்னி என்னும் கன்னிக் களத்திலே
சொற்ப காலம் சென்றாலும்
சொற்பமாகாது உன்பணி
பாலை நிலமதில் பாவப்பட்ட மக்களுடன்

பாசத் தந்தையாய் பாலகர் மத்தியிலே
பாதுகாக்க அருகிருந்தீர்
பார்த்திருக்க பாய்ந்த குண்டுகளால்
பாதையில் குவிந்த உடல் கண்டு
பார்க்க முடியாமல் பாதை நடுவில்
பாதையோரிவது உன் பயணம்
பசுமையாய் நிற்கின்றீர் பலர் கண்முன்
நீர்
காலம் காலம் வாழ்வீர்
வன்னி மக்கள் மனங்களிலே
மட்டுமல்ல,
அனைத்து தமிழர் மனங்களிலும்

அருட்சகோதரன் ம.கி. புரிஸ்கரன்
ஆரம்ப மெய்யிலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்குத் தலைவர்கள் இல்லையே...!

**அருட்பணி. M. றெக்ஸ் சவுந்தரா.**

எம் தமிழ் சமூகம் இன்னொரு யுகத்துக்குள் காலடி எடுத்து வைத்துள்ளது. இன்னொரு புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளது. மேத் திங்கள் நடுப்பகுதியில் நடந்தேறிய நிகழ்வுகள் நம் எல்லோருக்கும் அதிர்ச்சி, ஏமாற்றம், துயரம். கடந்த முப்பது வருட ஆயுதப் போராட்ட யுகம் "முடிவுற", ஒன்றுமில்லாத, வெறுமையான, இருள் நிறைந்த, நிச்சயமற்ற ஒரு எதிர்காலம் எம் கண் முன்னே பரந்து விரிந்து நிற்கின்றது. அடிமைத்தனத்தின் நுகத்தடி மேலும் எம் தோள்களை அழுத்திக்கொண்டிருக்கின்றது. "எங்களை அடுத்து வாழ்வோரின் பழிச்சொல்லுக்கு இலக்கானோம்; எங்களைச் சூழ்ந்துள்ளோரின் நகைப்புக்கும் ஏளனத்திற்கும் ஆளாகி விட்டோம்." (திபா 79:4) ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும், முப்பதுனாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளையும் இந்தக் காலம் காவு கொண்டுள்ளது. இவற்றைவிட நாங்கள் பட்ட துன்பங்கள், சுமந்த சிலுவைகள், ஏறிய கல்வாரி மலைகள், இழந்த இழப்புக்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவை. ஆனால் உயிர்ப்பு இன்னும் எமக்குக் கிட்டவில்லை; கானான் தேசம் இன்னும் எம் கண்களுக்கு எட்டவில்லை. எமக்கென்று தலைவர்கள் இல்லை. இலக்கு இல்லாதவர்களாக அல்லது அதில் தெளிவில்லாதவர்களாகக் கடந்த காலப் போரின் வடுக்களையும், அதன் எச்சங்களையும் (காயப்பட்டவர்கள், அவயவங்களை இழந்தவர்கள்) உள்ளங்களிலும், உடல்களிலும் சுமந்தவர்களாக இந்த இரண்டாவது பயணத்தை நாம் தொடர்கின்றோம்.

இந்தப் பயணத்திலே, 2005ம் ஆண்டோடு பூட்டப்பட்ட A-9 பாதை மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்படலாம். அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்பாதை திறப்போடு யாழ் குடாநாடு இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும், உலகத்துக்கும் திறந்து விடப்படப் போகின்றது. இத்திறப்போடு யாழ் குடாநாடு அடையப் போகும் அபிவிருத்தி ஒரு புறமிருக்க, அது கொண்டு வரப்போகும் ஆபத்துக்களை இப்பத்தியில் சிந்திப்பது பொருத்தமானதாகவிருக்கும். யாழ் குடா நாட்டுக்கு வந்து குவியப் போகின்ற மனிதர்கள், பொருட்கள் பின் நவீனத்துவக கருத்தியல்களின் செயல் வடிவங்கள் எம்மையும், எம் சமுதாயத்தையும் ஆக்கிரமிக்கப் போகின்றன. எமது இன்றைய இளையவர்களும், மாணவ, மாணவிகளும், சிறுவர் சிறுமிகளும் இவ்வாக்கிரமிப்பின் இலக்காக இருக்கப் போகின்றார்கள். நான், நாங்கள், என்னுடைய, எங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு மேலாக இப்பாதை திறப்பும் அது அனுமதிக்கும் உள்ளீடுகளும் நிர்ணயிக்கப்போகின்றன என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இதனால் ஏற்படப் போகும் கலாசாரச் சீரழிவுகளும், மனித மாண்புச் சிதைவுகளும், எம் விசுவாசச் சரிவுகளும் சொல்லும் தரமன்று. யாரும் எவரும் வந்து போகலாம்; வருகின்றவர்கள் எங்கும் எதையும், யாருக்கும் செய்துவிட்டுப் போகலாம் என்றவொரு நிலைப்பாடுதான் தோற்றம் பெறப் போகின்றது. ஏனென்றால் தட்டிக் கேட்பதற்கு இங்கு எவருமில்லை. இருக்கின்றவர்களும் பயிரை மேய்கின்ற வேலிகளாகவே இருக்கின்றார்கள்; இனியும் இருப்பார்கள்; அதற்கு எதுவித தடைகளும் இருக்கப் போவதில்லை.

இந்தப் பின்னணியிலே கடந்த மேத் திங்கள் 31ம் நாள் நாங்கள் தூய ஆவியாரின் பெரு விழாவைக் (பெந்தக்கோஸ்து விழா) கொண்டாடினோம். பெந்தக்கோஸ்து விழா மீட்பின் வரலாற்றிலே ஒரு புதிய யுகத்தின் திறவு கோலாக அமைந்தது. அதுவே திருச்சபையின் பிறந்த விழாவும், திருத்தூதர்களின் வாழ்வில் ஏற்பட்ட பெரும் திருப்பு முனையாகவும் அமைந்தது.

இயேசுவோடு கூடி வாழ்ந்த மூன்று ஆண்டுகளிலும் திருத்தூதர்களின் அன்றாட வாழ்வின் தீர்மானங்களை எடுப்பதில் இயேசுவே பெரும் பங்காற்றி வந்தார். தங்களின் வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு ஆளாகவே அவர்களும் இயேசுவைக் கருதி வந்தார்கள். இப்பொழுது அந்த இயேசு கொலை செய்யப்பட்டுவிட்டார். ஆகவே இனி எங்களையும் கொலை செய்வார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு. ஆயினும் மிகக் குறுகிய காலப் பயமே அது. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்து விட்டார். உயிர்த்த இயேசு நாற்பது நாட்களின் பின் விண்ணகம் சென்றதும் மீண்டும் பயம் திருத்தூதர்களைப் பிடித்தது. எங்களுக்குத் தலைவர் இல்லை, வழிகாட்டி இல்லை; இனி என்ன செய்வது என்று தெரியாதவர்களாகத் தங்களை ஓர் அறைக்குள்ளே பத்து நாட்களாகப் பூட்டி வைத்துக் கொண்டு "...இயேசுவின் தாய் மரியாவோடு இணைந்து ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்." (திப 1:14) இந்த நிலையிலே தான் பத்தாம் நாள் தூய ஆவியாரின் வருகையும், அவர்களின் வாழ்வில் என்றுமில்லாத ஒரு திருப்பு முனையும் ஏற்படுகின்றது. தூய ஆவியாரைப் பெற்ற திருத்தூதர்கள் இப்போது, எந்த மக்கள் தங்களைக் கொல்லுவார்கள் என்று அச்சம் கொண்டார்களோ அந்த மக்களைத் தேடிச் சென்று, அவர்கள் மத்தியில் எழுந்து நின்று புது யுகத்தின் செய்தியை அறிவிக்கின்றார்கள். இந்தப் புதிய யுகத்தின் வழிகாட்டி தூய ஆவியாரே.

இங்கேதான், இன்னொரு யுகத்துக்குள் காலடி எடுத்து வைத்துள்ள எங்களின் வெறுமையாகத் தெரிகின்ற எதிர்காலத்துக்கும், எங்களுக்குத் தலைவர்கள் இல்லையே என்ற ஏக்கத்துக்கும் விடை கிடைக்கின்றது. எப்பொழுது இந்த விடையை நாங்கள் கண்டு கொள்ளுகின்றோமோ அன்று தான் எங்களுக்குப் பெந்தக் கோஸ்து; அது தான் எங்களுடைய பெந்தக்கோஸ்து.

"தூய ஆவியார் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என்பதை எடுத்துக் காட்டுவார்." (யோவா. 16:8) இவற்றைத் அவர் எமக்கு எடுத்துக் காட்டித்தான் இந்த யுகத்துக்குள்ளே காலடி வைக்க வைத்துள்ளார். "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்." (யோவா. 16:13) முழு உண்மையை நோக்கிய அவருடைய வழிநடத்தலை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய யுகம் இது. "வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவா. 16:13) அவருடைய அறிவிப்பைக் கேட்க எம் செவிகளை திறந்து வைத்துக் காத்திருக்க வேண்டிய யுகம் இது.

"ஐயோ! பொன் இப்படி மங்கிப் போயிற்றே! பசும்பொன் இப்படி மாற்றுக் குறைந்து போயிற்றே! திருத்தலக் கற்கள் தெருமுனை எங்கும் சிதறிக் கிடக்கின்றன." (புல 4:1) செழிப்புற்றிருந்த யாழ் திருச்சபையின் இன்றைய நிலை இது. இந்த இறுதி மூன்று ஆண்டு யுத்தத்திலே நாம் நான்கு குருக்களை பலியாக்கியிருக்கின்றோம். ஐந்தாவது குருவைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். யாழ் திருச்சபையின் பெரும் பகுதி பாழ்பட்டுக் கிடக்கின்றது; மாதகல் கடலோரம் தொட்டு வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு வரை (வல்வெட்டித்துறை – பருத்தித்துறைப் பகுதியை விடுத்து) மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை முழுமையாகவும் இழந்து நிற்கின்றோம். பெரும்பான்மையான மக்கள் அகதி முகாம்களில். "கண்ணீராம் உணவை அவர்கள் உண்ணச் செய்தீர்; கண்ணீரை அவர்கள் பெருமளவு பருகச் செய்தீர்." (திபா 80:5)

இந்தப் பின்னணியிலேதான் யாழ் திருச்சபையும் இன்னொரு யுகத்துக்குள் காலடி வைக்கின்றது. இந்த யுகத்துக்குள் அது தன்னுடைய பெந்தக்கோஸ்தை அடைந்து கொள்வது இன்றியமையாதது. அதற்காக அது தன்னை நன்றாகத் தயார் படுத்த வேண்டும். தூய ஆவியானவருக்கான ஒரு திருவிழிப்புடன் திருப்தி அடைந்துகொள்ள முடியாது. எங்களுக்குத் தலைவர்கள் இல்லையே என்ற அங்கலாய்ப்பதை விடுத்து, தினமும் இயேசுவின் தாய் மரியாளோடு இணைந்து ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருக்கும் நிலையை அது தேட வேண்டும். அப்போது அங்கே உதயமாகும் பெந்தக் கோஸ்தே அதனுடைய பெந்தக்கோஸ்தாகும். அதுவே புது யுகம்; அதுவே விடுதலையின் யுகம்.

# தூய பவுலின் திருமுகங்களுக்கோர் பின்னணி

இதழ் 08 இன் தொடர்ச்சி...

4. உரோமையரும் உரோமைக் குடியுரிமை பெற்றவரும் தனிச்செல்வாக்கு பெற்றிருந்தனர்

இத்தகைய சூழலில் தூய பவுல் நற்செய்திப் பணியாற்றுகிறார் அதனால் துன்புறுகின்றார். மற்றக்கிறிஸ்தவர்களும், துன்புற்றுக் கொண்டிருக்கிறார்கள் எனவே நெறி கெட்ட சீரழிந்த தலைமுறையினிடையே குற்றமின்றி மாசற்றவர்களாய்க் கடவுளின் குழந்தைகளெனத் திகழுங்கள் (2:15) என்று அறிவுறுத்துகின்றார். எதிரிகள் முன் சிறிதும் மிரளாமல் இருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரிய வேண்டும் என்று உறுதிப்படுத்துகின்றார் (1:28) ஆண்டவருக்குள் நிலைத்திருங்கள் என்று (4:1) அழைப்பு விடுக்கின்றார்.

**இ. பிலிப்பியில் தூய பவுல்**

பிலிப்பியில் காங்கிதஸ் ஆற்றங்கரையோரம் செபித்துக்கொண்டு இருந்த பெண்களிடம் பவுல் போதிக்கின்றார். அவர் போதனையைக் கேட்டு இரத்தாம்பரம் விற்பவளான லீதியா என்பவள் மனம் மாறி திருமுழுக்கு பெற்று இருக்கின்றாள். பவுல் லீதியாவின் வீட்டில் தங்கிக் கொண்டு நகரிலே போதித்துக் கொண்டு இருக்கின்றார். அவ்வாறு போதித்துக்கொண்டு இருந்த போது ஒரு அடிமைப் பெண்ணையும் அவருக்கு உரிமையாளரான சில மனிதரையும் கண்டள் அவரிடம் இருந்து தீய ஆவியை ஓட்டியதால் சிறைப்படுத்தப்படுகிறார். மறுநாள் பவுலை சிறையிலிருந்து விடுவிக்க காவலர்கள் வந்த போது பவுல் தான் ஒரு உரோமைக் குடிமகன், நீதி ஆய்வின்றி தன்னை எப்படி அடிக்கலாம் என்று தன் உரிமையை நிலைநாட்டுகின்றார். ஏன் என்றால் உரோமையர்களுக்கு தனிப்பட்ட உரிமைகள் உண்டு. நீதி ஆய்வுக்கு உட்படுத்தாமல் அவர்களை யாரும் தண்டிக்கக் கூடாது. நீதியின் முடிவுக்கு பின்னும் தடியடித்தண்டனை அவருக்கு அளிக்கப்பட்டது.
(தி.தூ 16:16-40)

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் தன் குடியுரிமையை நிலைநாட்டுகின்றார். எனவே அஞ்சி ஓடி வருகின்றனர் தலைவர்கள். கெஞ்சி மன்னிப்பை கேட்கின்றனர். பவுலோ அஞ்சா நெஞ்சுடன் பிலிப்பை விட்டு வெளியேறுகின்றார்.

இவ்வாறு பிலிப்பை விட்டு சென்ற பவுல் 5 ஆண்டுகளுக்குள் பிலிப்பு திருச்சபையிடம் மீண்டும் வருகின்றார். ஐரோப்பாவில் கிடைத்த முதற்கனியெல்லாம் இந்த பிலிப்பு திருச்சபை. எனவே பிலிப்பு திருச்சபையின் பால் தூய பவுலுக்கு தனிப்பற்றுண்டு. தம் பயணங்களின் போது அடிக்கடி பிலிப்பு நகருக்குச் செல்கிறார். (1கொரி 16:5, தி.தூ. 20:1, 1திமோ 1:3, 2திமோ 4:13)

**ஈ. மடல் கட்ட விழ தளம் அமைத்தவை :-**

நற்செய்தியை கேட்டு மனம் திரும்பிய மக்கள் பல சபைகளாய் ஆங்காங்கே கூடி வழிபட்டனர். அவ்வாறு திருச்சபையாய் ஆனவுடனே அவர்களின் வாழ்வு தேனாக மாறிவிடவில்லை. இன்று நாம் காண்பது போல பேராலயங்களும் கட்டிடங்களும் கட்டப்படவில்லை. வறியவர்கள் ஏழைகள் அச்சபையிலே நிறைந்திருந்தனர். அடிமைகள், கைம்பெண்கள் அச்சபையிலே மிகுந்திருந்தனர்.

அடிமை, ஏழ்மை என்ற நிலை மாறிவிடவில்லை. எனினும் இவர்களிடமுள்ள உறவு நிலை மாறியது. இவ்வாறு உறவு நிலை மாறி அமைந்து சகோதரத்துவம் மலர தளம் அமைத்துக் கொடுத்தது அவர்களின் பகிர்வு.

அன்றைய திருச்சபையிலே பஞ்சத்தால் வாடிய சபைகள் இருந்தன. (தி.தூ.11:29). யூதேயாவில் பஞ்சமுண்டானதால் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற பொருளுதவியை அனுப்புகின்றனர். இவ்வாறு துன்புற்ற சபைகளோடு தம்மிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்வதில் முன்னணியில் நின்று பிலிப்பியத்திருச்சபை (பிலி 4:16-18; 2கொரி 8:1-2; 11:9)

அடுத்த இதழில் தொடரும்...

# இளமைக்காலத்தை இனிமையானதாக்குங்கள்

**ஆம்ஸ் ரோங் அடிகள்**

இளமைக்காலம் இனிமையான காலம். இலட்சியமுள்ளவர்களுக்கு அருமையான காலம்; சாதிக்க வேண்டிய சாதனைகளை செயல்படுத்தக் கூடிய நல்ல தலைவர்களாக உருவாவதற்கு தீர்மானம் எடுத்து வாழ பல சந்தர்ப்பங்களை சாதகமாக்கும் இளையோரே எதிலும் சாதனை படைகிறார்கள். எமது உரிமைகளும் கடமைகளும் நாமாக அனுபவிக்க சமயசிறுமியர்களும், சமூக பொறுப்புக்களும் ஏற்கும் நல்ல தலைவர்கள் உருவாக கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயனுள்ளதாக்குங்கள் என கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தினரால் புங்குடுதீவில் "உரிமைகளும் கடமைகளும்" என்னும் கருப்பொருளில் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் கருத்தமர்வு புங்குடுதீவு இளையோர்களுக்கான நிகழ்வில் சிறப்புரையாற்றிய புங்குடுதீவு பங்குத்தந்தை அருட்பணி. ஆம்ஸ்ரோங் அடிகள் தெரிவித்தார்.



இளையோர் தமது கிராம வளங்களையும் ஆற்றல் திறன்களையும் வெளிப்படுத்தும் கலந்துரையாடல் குழு பயிற்சிகள் மூலம் கைவேலைத்து பிரதிகளில் பதினைப் பெற்றுக்கொண்டமை. குழுமுயற்சிகளில் ஈடுபடுவது நல்லதலைவர்களை உருவாக வழிபிறந்தது.

கடற்றொழிலாளர் சங்கத் தினருக்கும் பெற்றோருக்குமான கருத்தரங்கு புங்குடுதீவு மக்களின் எழுச்சிக்காக அமைந்தது.

புங்குடுதீவு சிறுவர் விழிப்பூட்டல் கருத்தமர்வில் பங்குத்தந்தை ஆம்ஸ் ரோங் அடிகளார் சிறுவர் உரிமைகளும் கடமைகளும் ஒவ்வொரு சிறுவர்களின் ஆன்மீக தேடலுடன் ஒன்றிணைந்ததாக வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது என தெரிவித்தார்.

# அழைப்பின் குரல்...!

துன்பத்துள் துவளும் மனிதம் காக்க
துணைக்கரங்களாக மாற வா
விரக்தியின் விளிம்பில் மானிடம் தவிக்க
மனங்களை கல்லாக்கி மாற்றார் போல் ஒதுங்காது
மனிதம் காக்கும் புனித பணிக்கு திரண்டு வா
மாண்புறும் இறை சாயலைத்தான்
மனித அவலத்தில் நீ காண்கிறாய்
எதுவும் இல்லையென ஒதுங்கி விடாதே
எல்லாம் உன் மனத்தில் தான் உண்டு
மாற்றம் என்பதை உன் மனதில் தொடங்கு
புது உறவுகளுக்கு நம்பிக்கை ஊட்ட வா
புன்னகையுடனே புத்துணர்ச்சி கொடுக்க வா
நம்பிக்கை வார்த்தைகளைப் பகிர்ந்து வாழ வா
நல்வாழ்வுக்கு வழிகாட்ட துணிந்து வா
அகதிகள் அனாதைகள் எம் மண்ணில் இல்லை
அவர்கள் எல்லோரும் எம் சகோதரர்களே
சொந்த மண்ணில் அன்பிற்காக அலையும்
அன்பு உள்ளங்களை ஆற்றுப்படுத்த வா
துன்பம் களைய துணிந்து வா
அழைப்பின் குரல் கேட்டு உணர்ந்து வா
அர்ப்பணிப்போடு விரைந்து வா!

**ஆ. நிஷா**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தூதர் புனித தோமா

அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

## வாழ்க்கைப் பின்னணி

புனித தோமா கலிலேயா நாட்டில் மீனவ குடும்பத்தில் பிறந்தவர். பிறப்பால் யூதரான இவர் இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்ட நெருங்கிய நண்பர்களான திருத்தூதர்களில் ஒருவர். அரமேயச் சொல்லான தோமா (T'oma) என்ற சொல் இரட்டையர் என்ற அர்த்தம் கொண்டது. இதுவே வேதாகமப் புதிய மொழிபெயர்ப்பில் தரப்படுகின்றது. திதிமுஸ் (Didymus) என்ற கிரேக்கச் சொல் லுக்கும் இரட்டையர் என்று பொருளுண்டு. எனவே திதிமு எனப்படும் தோமா என்பது கூறியது கூறலாக அமைகின்றது. மேலும் இக் கண்ணோட்டத்தில் இவர் இரட்டைச் சகோதரர்களில் ஒருவர் எனப்படுகின்றது. சிரிய கிறிஸ்தவ மரபில் இவர் யூதாஸ் தோமஸ் என அழைக்கப்பட்டவர்.

## ஆளுமைப் பண்புகள்

இவர் பற்றி ஆரம்ப காலங்களில் பல வாறு எழுதப்பட்டிருந்தாலும் புனித யோவா னின் நற்செய்தியில் கூறப்பட்டுள்ளவையே உண்மையானவையாகக் கொள்ளப்படுகின் றன. இவர் அதிக துணிச்சலும் தன்னைத் தியாகம் செய்யும் மனப்பான்மையும் கொண்ட வர். இலாசரை உயிர்ப்பிக்க இயேசு சென்ற போது இயேசுவின் உயிருக்கு ஆபத்தான சூழல் நிலவியது. அதாவது யூதர்கள் அவரைக் கொல்ல வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்த நேரம் அது. ஆனால் இவர் துணிச்சலோடு தன்னுயி ரைத் துச்சமென மதித்துத் தன் குருவுக்காக உயிர் துறக்கத் தயாராயிருந்தவர். அதனால் தான் அன்று "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்றார் (யோவான் 11:16).

இவர் வெளிப்படையாகவும் நேரடியாக வும் பேசும் குணம் கொண்டவர். கடைசி இரா வுணவின்போது இயேசு "... நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" என்று கூறியபோது அவர் உடனடியாக "ஆண் டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக் கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?" என்று கேட்டுவிடுகின் றார். இத்தகையவருக்கே இயேசு தன்னைப் பற்றி "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" என்ற ஆழமான வெளிப் பாட்டை அருளினார் (யோவான் 14:4-5).

உயிர்த்த இயேசுவை நம்ப மறுத்ததால் 'நம்பாத தோமா' எனப்பட்டவர். ஆனால் இயேசுவை ஏற்றபோது அவர் கூறிய வார்த்தைகளோ ஆழமான அர்த்தங்கள் பொதிந் தவை: "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவான்: 20:24-29). இதன் பொருட்டு இவர் விசுவசிக்கும் தோமா என்று பின்னர் அழைக்கப்படுகின்றார். நம்பிக்கை ஆழம்மிக்க இவரது வார்த்தைகளையே இன்றும் நற் கருணை எழுந்தேற்றத்தின்போது "என் ஆண்ட வரே! என் தேவனே! என்று நாம் அறிக்கை யிட்டுக் கூறுகின்றோம்.



## மத்திய கிழக்கு நாடுகளில் மறைபரப்புப் பணி

உயிர்த்த இயேசு விண்ணேற்படைந்ததும் பார்த்தியா (தற்போதைய ஈரான், ஆப் கானிஸ்தான் பிரதேசம்) மேலும் மீதியா (Medes), பேர்சியா (Persia), 'சிர்கானியா (Hyrcania), பக்றியா (Bactria) எனும் மத்திய கிழக்கு நாடுகளில் மறைப்பணி ஆற்றினார். பார்த்தியாவிலிருந்தபோது இவர் இந்தியா செல்லவேண்டுமென திருவுளச்சீட்டு விழுந்தது.

## இந்தியாவில் மறைபரப்புப் பணி

இதனால் தன் வாழ்வின் இறுதிக்காலத்தில் கிட்டத்தட்ட கி.பி.52ம் ஆண்டளவில் கடல் வழியாக கேரள தென்மாநிலத்தில் குருவை யூர் (Guruvayoor) அருகிலுள்ள (Palayoor) பாலையூர் எனும் சிறு கிராமத்தில் வந் திறங்கினார். இப்பிரதேசத்தில் அவர் ஏழரைத் திருச்சபைகளை நிறுவினார். இவரது போத னையால் மனம்மாறிய முதற் கிறிஸ்தவர் களின் பரம்பரையில் பிறந்தவர்கள் இன்றும் கேரளாவில் 'புனித தோமையாரின் கிறிஸ் தவர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். கேரள மக்கள் தமிழ்நாட்டு மக்களைவிட இவரில் அதிக பக்தி கொண்டவர்கள் என்ற கருத்துப் பரவலாக உண்டு.

இவர் ஹபான் (Habban) எனப்படும் ஒரு வணிகரால் ஹொண்டோபாரஸ் (Gondophares) எனும் இந்திய அரசன் ஒரு வருக்குக் கட்டடக் கலைஞராகவும், தச்சரா கவும் விற்கப்பட்டவர் என்ற பாரம்பரியக் கதை யும் உண்டு. இவ்வரசன் புனித தோமாவிடம் பெருந்தொகைப் பணம் கொடுத்து பிரமாண்ட மான அழகிய மாளிகை கட்டும்படி கேட்டிருந் தார். ஆனால் புனித தோமாவோ மாளிகை கட்டுவதற்குப் பதிலாக அப்பணம் முழுவதை யும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். இத னால் ஆத்திரமடைந்த அரசன் அவரைச் சிறை யில் அடைத்தார். ஆனால் அவரோ அற்புத மாகத் தப்பிச் சென்றார். இவ்வாறு அவர் தப்பி யது அரசனை மனம் மாறவைத்தது. இச்சம் பவத்தின் அடிப்படையில் கட்டிடக்கலைஞர் கள், மேசன்மார் புனித தோமாவைத் தமது பாதுகாவலராக கொண்டு வணங்குகின்றனர்.

இவர் இந்தியாவில் பணியாற்றியபோது பல புதுமைகள் செய்தார். அத்தோடு அவர் வாழ்விலும் பல புதுமைகள் இடம்பெற்றன. அவர் மறைந்து வாழ்ந்த குகை சென்னை யில் சின்னமலை என்று அழைக்கப்படுகின் றது. அதில் இன்னமும் சற்று பெரிதான துவாரம் உண்டு. தோமாவைக் கொலை செய்ய பகையாளர் துரத்தி வந்தவேளை, தன்னைக் காப்பாற்றும்படி இறைவனிடம் மன்றாடினார். உடனே இத்துவாரம் அற்புத மாக் தோன்ற அவர் அதனூடாகத் தப்பிச் சென்றதாகப் பாரம்பரியக் கதை உண்டு.

தற்போது 'சாந்தோம்' என அழைக்கப் படும் மைலாப்பூரில் புனித தோமா பிராமண குலத்தவர்களால் ஈட்டியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இவர் கி.பி 72ம் ஆண்டி லில் ஆடி 3ம் திகதி (உண்மையான காலமல்ல) இறந்ததாகக் கருத்து உண்டு. இவரது உடல் புதைக்கப்பட்ட இடத்திலேயே இப்போது புனித தோமா பேராலயம் கட்டப்பட்டது. பல நூற் றாண்டுகளாக அவரது இறந்த தினங்களில் அவர் புதைக்கப்பட்ட இடத்தில் இரத்தம் தோன்றியதாகப் வாய்மொழிக் கதை உண்டு. கி.பி. 232ம் ஆண்டில் இவரது திருவுடலை விலைமதிக்க முடியாத சொத்தெனக் கருதிய வணிகரான காபின் (Khabin) என்பவரால் சிரியாவிலுள்ள எடெஸ்சாவுக்கு (Edessa = Urfa) எடுத்துச் செல்லப்பட்டது. புனித யோவான் கிறிஸ்தோதம் காலத்தில் (கி.பி. 4ம் நூற்றாண்டில்) புனித தோமாவினது கல்லறை சிரியாவிலுள்ள எடெஸ்சா என் னுமிடத்திலிருந்தது. இங்கும் இந்தியாவிலும் அவரது திருப்பண்டங்கள் இருந்த இடத்தில் பல புதுமைகள் இடம்பெற்றன. கிரேக்கத் தீவான சியோசில் (Chios) குறுகிய காலம் வைக்கப்பட்ட இவரது திருப்பண்டம், 1258ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ம் திகதி மேற்கு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவை வது இத்தாலிக்கும் போர்த்துக்கலுக்கும் கொண்டு செல்லப்பட்டது. தற்போது இவை இத்தாலியிலுள்ள ஓர்றோனா (Ortona) என்னுமிடத்தில் உள்ளது.

புனித தோமா இந்தியாவின் மறை சாட்சியென அழைக்கப்படும் அதேவேளை இவரே அதன் பாதுகாவலருமாவார்.

மீனம்பாக்கம் விமானநிலையத்தின் அருகில் 'பரங்கி மலை' அல்லது 'புனித தோமையார் மலை' (St.Thomas Mount) என்ற மலை உண்டு. அங்கு புனித தோமா தன் கையால் செதுக்கி செய்து வழிபாட்டுக் குப் பயன்படுத்திய கருங்கல் சிலுவை பீடப் பகுதியிலும், புனித லூக்கா வரைந்த அன்னை மரியாளின் ஓவியம் உட்பக்கச் சுவரிலும் உண்டு. இச்சிலுவையின் படத்தை இந்திய தபால்நிலைக்களம் முத்திரையாக வெளி யிட்டிருந்தது.

## புனிதரின் திருநாட்கள்:

கத்தோலிக்க திருச்சபையிலும் கீழைத் தேயத் திருச்சபை இரண்டிலும் தோமா புனிதராக வணங்கப்படுகின்றார். கத்தோலிக்க திருச்சபையில் இவரது பெருநாள் முதலில் மார்கழி 21ம் திகதி கொண்டாடப்பட்டது. பின்னர் இதே நாளில் இறந்த புனித பீற்றர் கனிசியஸ் அவர்களின் திருநாளைக் கொண்டாடுவதற்கு உதவியாக கத்தோலிக்க திருச்சபையிலும் அங்கிளிக்கன் திருச்சபையி லும் ஆடி மாதம் 3ம் திகதி கொண்டாடப்படு கின்றது. இந் நாளிலேயே இவரது திரு உடல் மயிலாப் பூரிலிருந்து மெசப்பதேமி யாவிலுள்ள எடேசாவுக்கு மாற்றப்பட்டது. கீழைத்தேயத் திருச்சபைகளில் கொப்பிக் சபையில் உயிர்த்த ஞாயிறின் பின்னர் வரும் ஞாயிறில் கொண்டாடப்படும். அதேவேளை பைசன்ரைன் கத்தோலிக்க திருச்சபையில் ஐப்பசி 6ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

## முடிவுரை

புனித தோமா இலங்கைக்கு வந்ததாக வாய்மொழிக் கதை உண்டு. இங்கும் அவ ருக்கு பல ஆலயங்கள் உண்டு. புனித தோமா பல்வேறு இடர்கள் மத்தியில் பய ணங்கள் மேற்கொண்டு வித்தியாசமான பண்பாட்டு மக்களிடையே, வித்தியாசமான மொழி பேசும் மக்களிடையே தங்கித்து வாழ்ந்து மறைப்பணியாற்றினார். இயேசுவின்மீது கொண்ட அன்பு நம்பிக்கை காரணமாகத் தன் துன்பங்களைச் சுமந்து இறுதியில் மறைசாட்சியாக இறக்கின்றார். இவரது சீடத்துவம் எமது மறையார்வத்துக்கு ஒரு உந்து சக்தியாக விளங்குகின்றது.

இவரைப்பற்றிய படம் ஒன்று பெருமளவு பணத்தில் பிரமாண்டமான தயாரிப்பாகத் தயாரிக்கப்படுகின்றது. அவரது வாழ்வுபற்றித் தெளிவான பல உண்மைகளை வெளிக் கொணரும் என எதிர்பார்க்கலாம்.


1. David Preital. (1996). *Saints for Young Christians*. Manila: St.Pauls.
2. Lovasik. (1993). *Book of Saints*. Part 8.New York: Catholic Book Publishing Co..
3. Mausolfe, A.J.M. & Mausolfe, J.K.(1994).*Saint Companions For Each Day*. Bombay: St.Pauls.
4. Theological Publication of India. (1977). *Everyday Prayer from the Divine Office*. New Delhi: Rekha Printers.
5. Wikipedia. the free encyclopedia


# கவிதைச் சரம்

## மனித அவலம்

நிலைகுலைந்த உடலில்
நிறைவுகளை தேடுகின்றோம்
பெரும நிலைப்பாட்டில்
புனித அவலத்தை

புதைகுழிகள், மரணங்கள்.
இரத்த வெள்ளம். பசி. பட்டினி.
மரண அவலம் மனிதம் எங்கே
மானிட மனிதம் எங்கே?
அனாதை ஆகினோம் இங்கு
ஆறுதல் கூறுபவர் யார்?
ஆதரிப்பார் யார்?

பரமனுக்கு வரவேற்பு
பந்தரளைப்பில் உள்ளோம்
வாடுகின்ற எமது புலம்பலைத்து
காண்பாயோ நல்ல தேவனே
உமது தூதனை அனுப்பும்

போதும் மனிதனை வாட்டும்
துன்பங்கள்
மனிதன் மனிதத்தை தேட
உறவுகளை தொடர
மனித அவலம் நீங்க
உம் தூதனை அனுப்பும்

இ. நவீந்திரன், மாவிட்டபுரம்

## தேடிப்பார்க்கிறேன்

தேடுகின்றேன்
என் இனிய நாட்களை!
எங்கே தொலைந்தது அந்த காலம்
சகோதரர்களே நீங்கள் பார்த்தீர்களா
துள்ளித்திரிந்த காலம்
பள்ளி பயின்ற காலம்
தெருவெல்லாம் ஓடி விளையாடிய
காலம்

அந்த இனிய நாட்களை
மீண்டும் தேடுகின்றேன்

என் ஊரைத் தேடினேன்
என் உறவைத் தேடினேன்
என் வீட்டைத் தேடினேன்
என் நண்பர்களைத் தேடினேன்

ஓ அதோ தொலைந்தது சுடுகாடுகளாய்
அதோ விழுந்த இடமல்லவா
மண்மேடாய

தெருவெல்லாம் பிணங்களையாய
எலும்புக்கூடாய் மண்டையோடாய்
புதைகுழியாய்
நரிகளின் ஓலமாய்
கண்ணுறங்க தெரியாமல்
அலையும் உள்ளங்கள்தான் எங்கே
இறைவன் எனக்கு
கொடுத்தவைகளை
எமாற்றோர் எடுத்ததினால்
இடம்பார இழந்தனன்
இருக்கும் வரை
தேடிப்பார்க்கிறேன்

M. ஜெயமணி, மெஞ்ஞானம்

## இரங்குமையா!

எரிகின்ற எம் தேசத்தில்
எத்திசை எங்கிலும்
எழுகின்ற மரண ஓலங்கள்
ஓடுகின்ற இரத்த ஆறுகள்
துண்டாடப்படும் உறவுகளின் உடல்கள்
சிதைந்திட்ட உள்ளங்களின்
குமுறிடும் விம்மலாக
எழுகின்ற எண்ணற்ற சோகங்கள்
சொல்லிட முடியா இழப்புக்கள் - எழுதிட
வடித்திட முடியா துயரங்கள் - வாழ்வில்
அனுபவித்திட்ட துன்பங்கள்
கண்களால் கண்டிரா அவலங்கள்
ஏன் இறைவா எமக்கு இந்தநிலை!
எப்போதும் கண்டிராத அவலநிலை
இரங்குமையா ஏழைகள் எங்கள் மேல
இடைப்படுகின்றோம் இறைவா
எங்களின் சோகநிலை
ஓடி ஓடி ஓய்ந்து போனோம்
அழுது அழுது சோர்ந்து போனோம்
அனைத்தையும் இழந்து அகதியானோம்
அழுவதற்கு கண்களில் கண்ணீரில்லை
இனி இழப்பதற்கு - இறைவா
உன்னைத்தவிர ஏதுமேயில்லை
கூப்புகின்றோம் எம் வேண்டுதலை
ஏங்குகின்றோம் உம்மை நோக்கி - இறைவா
இரங்கிடுவாய் எங்கள் மீது காத்து
நடத்திடுவாய் நாம் என்றும் அமைதியுடன்!

அனுப்பியவர்: ஆ. அன்னலட்சுமி, மண்டைதீவு

## பட்டது போதும்

காலைப் பனியதற்கு
கதிரவன் கண்டால் இன்பம்,
வாழைக் குயிலதற்கு,
வசந்த காலம் வந்தால் இன்பம்
இயேசுதேசம் "பொலாவுக்கு"
இருட்டென்றால் இன்பம்
இத்துணைக்கும் ஒரு காலம்,
இன்பம் இலவசமாய் கிடைத்துவிடும்.
ஊதியமற்ற தமிழினத்திற்கு,
நாம் பிறந்தால் ஏது இன்பம்.

ஒரு வேளை உணவிற்கு,
ஓடேந்தி நிற்கின்றோம்
மாற்று உடையின்றி,
மர நிழலில் வாழ்கின்றோம்
உறவுகளை சிதற விட்டு,
ஒலமிட்டு கதறுகின்றோம்.
ஒரு புறத்தில் வேடன்,....
மறுபுறத்தில் நாகம்,....
இரண்டிற்கும் இடையில்,
அகப்பட்டு ஏங்குகின்றோம்;
அலைந்து, அலைந்து;
அகதி முகாம் தேடுகின்றோம்;
இனியும் என் இன்னல்கள்....?
பட்டது போதும் இறைவா,
மகற்கனவு எதுவும் வேண்டாம்,
பட்டினிக்கு ஒரு வேளை,
பாலையிலே சோறு போதும்.

செல்வி ந. ஜெகதீசர்,
பேக்கரி லேன், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட திறனாய்வு

## 'யாவரும் நலம்'

சமூகத் தொடர்பு ஆணையம், யாழ் மறைமாவட்டம்

தமிழில் அண்மையில் வெளிவந்த திகில் திரைப்படமான 'யாவரும் நலம்' பற்றி இவ்வாரம் பார்க்கலாம். திகில், ஆவியுலகு மற்றும் அமானுஷ்ய விடயங்கள் பற்றிய திரைப் படங்களுக்கு தமிழில் நிறையவே பஞ்சம் உண்டு. தமிழ் சினிமாத் துறை மலினமான ஜனரஞ்சக திரைப் படங்களையே அளவு கணக்கின்றி உற்பத்தி செய்வதாலோ என்னவோ தமிழ் ரசிகர்களும் அவற்றிற்கே பழக்கப்பட்டு விட்டார்கள். 'யாவரும் நலம்' படத்தில் சற்று வித்தியாசமாக, சற்று திகிலுடன், ஆவியுலகு மற்றும் அமானுஷ்ய விடயங்கள் பற்றிய சிறிய விவாதத்தை அதன் இயக்குனர் விக்ரம் குமார் முன்வைக்கிறார்.

திகில் படங்கள் என்றவுடன் பதின்மூன்றாம் எண்ணை முதன்மைப் படுத்துவது வழமையானது. சீன மற்றும் ஐரோப்பியர்களிடையே தோன்றிய (மூட) நம்பிக்கையின் படி எண் பதின்மூன்று துரதிருஷ்டம் உள்ளது. பேய்களுக்கும், தீய ஆவிகளுக்கும் மிகவும் பிடித்தமானது. எனவேதான் பொதுவாக விமானங்களிலும், கப்பல்களிலும், ஹோட்டல்களிலும் எண் பதின்மூன்றில் இருக்கைகள் அல்லது அறைகள் இருப்பதில்லை. 'யாவரும் நலம்' திரைப்படம் ஒரு குடும்பம் புதிதாக ஒரு குடியிருப்புத் தொகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு குடிவருவதுடன் ஆரம்பமாகிறது. கதாநாயகன் மனோகர் (மாதவன்) அவனது மனைவி பிரியா (நீது சந்திரா), அவனது தாய் (சரண்யா), கல்லூரியில் கற்கும் அவனது தங்கை, அவனது அண்ணன், அண்ணி, அவர்களது இரண்டு சுட்டிப்பிள்ளைகள் என்று ஒரு மகிழ்ச்சியான, கலகலப்பான எட்டுப்பேர் கொண்ட பெரிய குடும்பம். ஆனால் அவர்கள் குடிவருகின்ற வீடோ அந்தக் குடியிருப்புத் தொகுதியின் பதின்மூன்றாம் மாடியில் உள்ள 13B இலக்க வீடு. கேட்கவா வேண்டும்? ஆரம்பம் முதலே திகில். பால் காய்ச்ச முடியவில்லை. தீய்ந்து போகிறது. கமரா உள்ள தொலைபேசியில் படம் எடுத்தால் மனோகரின் முகம் சுருண்டு தெரிகிறது. மனோகர் மட்டும் மின் தூக்கியில் ஏறினால் அது தொழிற்பட மறுக்கிறது. வீட்டில் எல்லா இடங்களிலும் மின் ஒழுக்குப் பிரச்சினை. அடுத்த வீட்டில் வாழ்ந்த கண்தெரியாத பெரியவரின் வழித்துணையான பெரிய கறுத்த நாய் தேவையே இல்லாமல் இந்த வீட்டைப் பார்த்துக் குரைக்கிறது. இந்த வீட்டிற்குள் அதைக் கொண்டு வர முற்பட்டபோது வெறிபிடித்து தறிகெட்டு ஓடித்தப்புகிறது. அந்த மாடியில் பேயா? அந்த வீட்டின் பெண்கள் சராசரியான மத்தியவர்க்க தமிழ் பெண்களாகக் காட்டப்படுகிறார்கள். வீட்டின் ஆண்களை வேலைக்கும், பிள்ளைகளை பாடசாலைக்கும் அனுப்பி விட்டு அவசர அவசரமாகச் சமையலை முடித்து தொலைக்காட்சியின் சின்னத் திரைகளிலும், மெகாத்தொடர்களிலும் மெய்மறப்பவர்கள். அவர்களது விவாதங்கள் எப்போதும் இத் தொடர்கள் பற்றியே. உச்சக்கட்டங்களில் 'தொடரும்' போட்டால் அல்லது விளம்பரம் வந்தால் தொலைக்காட்சிக்காரரைத் திட்டித் தீர்த்து சலித்து கவலையோடு எழுந்து செல்வார்கள். இப்புதிய வீட்டில் அப் பெண்களுக்கும் சோதனை காத்திருந்தது. மதியம் ஒரு மணிக்கு அவர்கள் வழக்கமாகப் பார்க்கும் 'காதிதமார்' என்ற தொடரை பார்க்க அமர்ந்தால், தொலைக்காட்சியோ 13ம் அலைவரிசையில் சிக்கிக் கொள்கிறது. சரியாக ஒரு மணிக்கு (13:00) ஒரு புதிய தொடர் அன்று ஆரம்பிக்கிறது. அதன் பெயர் 'யாவரும் நலம்'. வேறு வழியில்லாமல் அதைப் பார்க்க ஆரம்பிக்கும் பெண்களுக்கும் பிடித்துப்போகிறது. ஆனால் பிரச்சினையே அங்கு தான் ஆரம்பிக்கிறது.

அச்சொட்டாக மனோகர் குடும்பத்தைப் போலவே 'யாவரும் நலம்' தொடரில் வரும் குடும்பமும் உள்ளது. தொடரில் வரும் சுக, துக்க சம்பவங்கள் அனைத்தும் மனோகர் குடும்பத்திலும் நடக்கின்றன. தற்செயலாக இத்தொடரை ஒரு நாள் பார்த்த மனோகர் அதனால் ஆட்கொள்ளப்படுகிறான். தனதும், தனக்கு உதவி செய்யும் பொலிஸ் நண்பனினதும் குடும்பத்தினரது துரதிருஷ்ட நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தல்கள் வைத்திருக்க இத்தொடரின் காட்சிகளில் தங்கியிருக்க ஆரம்பிக்கிறான். ஆனால் கதையோ வேறுவிதமாக நகர்கிறது. முப்பது வருடங்களுக்கு முன்பு அச்சொட்டாக தனது குடும்பத்தைப் போலவே எட்டு உறுப்பினர்களுடன் வாழ்ந்து, அண்ணன் நீங்கலாக, ஒரேயடியாகக் கொலைசெய்யப்பட்ட ஒரு குடும்பத்தின் உண்மைக் கதையே 'யாவரும் நலம்' தொடரின் கதை என்றும், அக்குடும்பம் வாழ்ந்தது கூட தனது குடியிருப்புத் தொகுதியிலேயே என்றும் மனோகர் அறிந்து கொள்கிறான். திரைக் கதையோ, அநியாயமாகக் கொலையுண்டவர்களது ஆவி, அங்கு குடியிருக்க வந்த மனோகரை அவனையறியாமலே பாவித்து, தங்களது கொலைக்குக் காரணமாக இருந்து சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து விட்டவனை, தாங்கள் பலி எடுக்கப்பட்ட அதேயிடத்திலேயே பழிவாங்குவதாக நகர்ந்து சென்று நிறைவடைகிறது.

அநியாயம் செய்பவர்கள் ராஜதந்திரங்களினூடாக சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கலாம். ஆனால் அவர்களது தர்மக் கணக்கைத்தீர்க்க ஆவிகளே போர்க்கோலம் பூணலாம் என்ற இந்து தர்மத்தின் செய்தியை கூறி அமைகிறது இத்திகில் திரைப்படம். அத்துடன் சின்னத்திரைகளிலும், மெகாத்தொடர்களிலும் மூழ்கி, வாழ்வின் யதார்த்தங்களை மறக்கும் மத்தியவர்க்க தமிழ் பெண்களுக்கும் போதியளவு கிண்டலுடன் கூடிய செய்தியைக் கூறியிருக்கிறது.

பொருத்தமான இசையும், கமராக் கோணங்களும் திகில் திரைப்படங்களுக்கு அணி செய்வன. 'ஆளவந்தான்' படத்திற்குப் பிறகு தமிழில் இசையமைக்கும் சங்கர் எசன் லோய், அற்புதமான ஒளிப்பதிவாளர் பி. சி. ஸ்ரீராம் ஆகியோர் தம் பணியை செவ்வனே செய்துள்ளனர். மாதவனின் எல்லாப் பாத்திரங்களுக்கும் ஈடுகொடுக்கும் தன்மையும், சரண்யாவின் குடும்பப் பாங்கும், நீதுவின் ஆர்ப்பாட்டமற்ற நடிப்பும் சாதகமான புள்ளிகள். மொத்தத்தில், சொல்ல வந்த கதையைப் பற்றிய விவாதங்கள் பல மட்டங்களில் இருந்து எழுந்தாலும், சம்பிரதாய-ஜனரஞ்சக தமிழ் சினிமாக் குப்பைகளிலிருந்து விலகி, வித்தியாசமான 'சினிமாக் கலை' ஒன்றை தமிழில் பிரசவித்த பெருமையை 'யாவரும் நலம்' பெறுகிறதெனலாம். (இதே படம் 13B என்ற பெயரில் ஏக காலத்தில் ஹிந்தியிலும் வேறு கலைஞர்களின் பங்களிப்புடன் உருவாக்கப் பட்டுள்ளது.)

## மானிடர்க்கு உண்மை... (2ம் பக்கத் தொடர்ச்சி...)

இறைமகன் இயேசு மனுக் குலத்திற் காக தம்மையே வெறுமையாக்கியதும் காலத்தையும் நேரத்தையும் கடந்தவர் காலத்திற்குட்பட்டு இஞ்ஞாலத்தில் பிறந்ததும் படைப் பவர் தன்னால் படைக்கப்பட்ட பெண்ணிடம் உருவாக்கப்பட்டதும் மனிதரைப் பராமரிப்பவர் மனிதரின் பராமரிப்பில் வளர்ந்தும் மனிதரை வழிநடத்துபவர் மனிதரிடம் தன்னைக் கையளித்தும் எதற்காக? மானிடர்களாகிய எம்மேல அவர் கொண்ட அளவில்லா அன்பிற்காக, பாவத்தின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் எங்களை மீட்டு வாழ்வு தருவதற்காக, இன்றும் இன்று சிந்திக்கின்ற பொழுது அடிமைப்படுத்தப்பட்டு துன்புறுத்தப்படும் எமக்கு உண்மை வாழ்வளிப்பதற்காகவுமே அவர் இவ்வாறு திட்டம் வகுத்தார்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் தனக்கு விடுதலை வேண்டி அதற்காக உழைப்பதை நாம் காண முடிகிறது. இந்தவகையில் மானிடர்க்கு உண்மை விடுதலை வாழ்வை அளிக்க வல்லது நற்கருணையே. இன்றைய வாழ்க்கைச் சூழலில் மக்கள் உணவிற்காக அலைந்து பரதவிக்கும் வேளையில், மனித குலத்தின் மூன்றில் ஒரு பங்கு மனிதர்கள் பசியுடன் படுக்கைக்குச் செல்லும் வேதனையான காலத்தில், இறைவன் தம்மையே உணவாக வழங்கும் நிகழ்வு உண்மையிலேயே அவர்களுக்கு விடுதலை வாழ்வை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. அன்று துன்பத்தின் சுமைகளில் கலங்கிய மனிதர்களுக்கு விடுதலை வாழ்வைக் காட்டிய அதே இறைவன் இன்று துன்புறும் எம் மக்களுக்கு உண்மை விடுதலை வாழ்வளிக்க நற்கருணை வடிவில் பிரசன்னமாயிருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவரிடம் செல்வோம்.

## அன்னை கடவுளுடைய உன்னத கொடை

இந்த உலகத்திலே உதிக்கின்ற ஒவ்வொரு உயிரினமும் சொல்லும் முதல் வார்த்தை "அம்மா" ஏன் "அம்மா என்று அழைக்காத உயிரில்லையே" என்ற அடிகள் சொல்வது அவள் அன்பைத்தான். "அம்மா" என்ற வார்த்தை அறிவு சொல்லித் தரவில்லை. உணர்வின் ஆழத்தில் ஊற்றெடுக்கிறது. அதனால் தான் பால்குடிமறவாத பாலனுக்கு பாசத்தோடு அழைக்கிறது "அம்மா" என்று.

இந்த வகையில் "மகனே, இதோ உன் தாய்" என்று இயேசுவால் எமக்காய் தரப்பட்ட மிகப் பெரிய கொடை அன்னை மரியாள் மீட்பரை உலகிற்கு ஈன்ற தன் வாழ்க்கையை இறைதிட்டத்திற்கு பரிசாக்கினாள். இயேசுவின் வாழ்வில் ஆரம்பப் புள்ளி முதல் உலக வாழ்வின் இறுதிக் கணம் வரை அவரோடு நடந்து வழிகாட்டிய வல்ல அன்னை.

"ஆம்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்தவள். இறைவனால் ஆகாதது எதுவுமில்லை என ஆணித்தரமாகத் தனது வாழ்வால் எடுத்தியம்பியவள். கறைபடாத தீபமாக அமல உற்பவியாய் அருள் பெற்றவள். ஆண்டவரை கருவில் தாங்கி தன் கையில் ஏந்தி பாசமுலைப்பால் ஊட்டி வளர்த்த தாயல்லவா. உண்மையிலேயே "இயேசுவே உம்மை கருத்தாங்கி பாலூட்டிய அன்னை பேறுபெற்றவள்."

ஒரு தாய் தன் பிள்ளையின் ஒவ்வொரு அசைவிலும், கண்ணிலும் புதைந்துக் கிடக்கும் ஆயிரம் அர்த்தங்களை உணர்வாள். பிள்ளையின் தேவை அன்னைக்குத் தெரியும். இது தாய்மைக்கே உரிய தனித்துவம். "மகனே இரசம் தீர்ந்து விட்டது" அன்று கானாவூர் திருமண வீட்டில் காலத்தின் தேவை அறிந்து அவர் மானம் காத்தவள் அந்த அன்னையவள் எம்மிடம் கேட்பதோ "அவர் சொல்வதை உடனே செய்யுங்கள்"

வைகாசியில் பூவாய் திருச்சபை போற்றும் வண்ண மலர் வாடாமல் இருக்கத்தானோ, அந்த இரக்கத்தின் நதி ஆண்டிலே அபரிமிதமாக புரிபொங்கும் ஏற்றோடு நின்றது.

எந்தத் தாயும் தன் பிள்ளை அனைத்திலும் சிறந்து ஆனந்தமாக வாழ்வதைத் தானே விரும்புவாள் அன்னை மரியாள் உன்னைப் பெற்ற தாயைவிட உன்மேல் உயிரையே வைத்திருக்கிற அன்னை. உன் சின்னச் சின்ன தேவைகளிலும் பிள்ளைக்குரிய பாசத்தோடு அன்னையிடம் செல். அவளது அன்பின் மிகுதியைக் காண்பாய் உன் வலியால் அவள் உனக்காய் கண்ணீர் சொரிவாள். உன்வலி சுமப்பாள் தன்மடியில் வைத்து தாலாட்டுவாள். அன்னை மரியாளை அன்பு செய்து பார் உன்னைப் பெற்ற தாயின் அன்பையும் சுவைத்து மகிழ்வாய். எமக்காய் ஒரு அன்னை வாழ்கிறாளே இது கடவுள் எக்களித்த மாபெரும் கொடை அல்லவா?

ஜெபமாலை அன்னை தன் அன்பைச் சுவைக்கத்தந்த மாபெரும் பாசக்கயிறு வல்லமையான கயிறு, வானகத்திற்கான ஏணிப்படி.

அஜந்தன்
புனித மடுத்தீனார் குருமடம், யாழ்ப்பாணம்.

## யாரை நான் சிலுவையில் அறைவது?

யுத்தம் என்பது பாம்பிலும் கொடியது
அத்தனை பச்சம் நம் உள்ளத்தில் கொடியது
கடவுளை வேண்டி நம் மனம் பாடியது
கஷ்டத்தை நினைத்து நம் எண்ணம் ஓடியது

கால்களை இழந்தோர் பலபேர்
கண்களை இழந்தோர் பலபேர்
கைகள் அற்றுப்போய் பெரியோர்
உதிரம் சிந்தியோர் எண்ணிலோர்

பாரிய இழப்பு சகல இடமும்
கரிய இருளில் அவலக் குரல்கள்
பெரிய வீடுகளோ தரைமட்டம்
வறிய மக்களோ மரங்களின் கீழ்

இத்தனை அவலங்கள் காரணம் யுத்தம்
அத்தனையு மொழிப்பது கடமை - நமக்கு
யுத்தத்தை நிறுத்தியே வைப்போம்
சமாதானத்தை உறுதியாய் பெறுவோம்

எம் பாவங்கள் போக்க நீயும்
சிலுவை தனில் மரித்தாயோ யேசுவே
யுத்தத்தின் வடுவை போக்க
யாரைத்தான் சிலுவையில் அறைவது

கு. சிந்துஜா, யாழ்ப்பாணம்


# 6ம் ஆண்டு நினைவஞ்சலி



இளவாலை ஆசிரியை

திரேசம்மா அடைக்கலமுத்து (அமுது)

நினைவு 02-06-2009

பொன் சொற்களால் என்றும் இறையன்பு மூட்டி
பொழுதெல்லாம் மக்களில் பேரன்பு காட்டி
எளிமை, பிறரன்பு, பண்பு எனும் நகைகளைப் பூட்டி
எல்லோரும் பாராட்டும் மங்கலம் சூட்டி

பூச்செடிகளில் எமை வளர்த்த பொன் நிலவே
காற்றின் அலைகளில் உமது குரல் கேட்கிறது
அம்மா என்று கண்ணீர்த்துளிகளில் நனைந்து விடும்
எங்கள் குரல் கேட்கிறதா?

இளவாலையிலிருந்து லண்டனுக்கு வந்தீர்
இங்கிருந்து இறைவன் உம்மை அழைத்துச் சென்றார்
வான் வீட்டில் சந்திப்போம்
சமாதானத்தில் இளைப்பாறுவீராக.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள்,
குருமகனார் சந்திரகாந்தன் அடிகளார்.

Advt-46/09



# விண்ணக வாழ்வின் 39 ஆம் வருடநினைவு



அன்னை மடியில் 06.10.1962 — ஆண்டவன் மடியில் 26.06.1970

மரியம் சர்மினி சில்வெஸ்ரர்

ஆண்டுகள் முப்பத்தொன்பதாகியும்
நின் நினைவுகள்
எம் நெஞ்சங்களை நனைக்கின்றன.

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்.

மிருசுவில்.

Advt-44/09



# 47 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

யோசெப் மரியநாயகம் மேரி பிலோமினா (மலர்)

மண்ணில்: 18.02.1949 விண்ணில்: 22.04.2009

"நீங்கள் என்றும் இறைவனின் திருமுகம் கண்டு மகிழ்ந்திருக்க உங்களுக்காக செபிக்கின்றோம்"

உறவைத் தேடும் பறவையாக எமை விட்டுப் போனாயே இறைவன் வீட்டில் தஞ்சமாய் இதயம் நொந்து புதிந்தாயே குன்று மழையின் மத்தியிலேதுருகி சொரிய வீழ்ந்தாயே கண்ணாய் எம்மை காத்திருந்து கண்ணீரில் மிதக்க விட்டாயே உன்னை எண்ணி எம் மனது உதிரம் துடிக்குது எம் மனது உறவுகள் சிதறி ஆங்காங்கே அனாதைகளாகி போகிறதே உன்னை நம்பிய பிள்ளைகள் - நாம் அனாதைகளாகி போனோமே இறைவனிடம் வேண்டுகின்றோம் இதமாய் அவர் பதம் நீயோ ம் என்றும் நினைவில் வாழ்கின்றோம் எப்போது வருவாய் எம் தாயே

தவசிக்குளம்
மிருசுவில்

இவரது பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Advt-45/09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகப் பங்கில் முதல் நன்மை விழா

**"நற்கருணையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நாம் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றப்படுகிறோம்"**

**— அருட்பணி. திருமகன் அடிகள் —**



கடந்த 23.05.2009 அன்று சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 19 சிறார்களுக்கு தேவநற்கருணை என்னும் திருவருட் சாதனமாகிய புனித நிகழ்வு இடம் பெற்றது. திருவருட்சாதன திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்பணி. திருமகன் அடிகளார் தமது மறையுரையில் ''நற்கருணை என்பது வானில் நின்று இறங்கி வந்த உணவு. அது பரிசுத்தமானது. ஒவ்வொரு திருப்பலியிலும், சாதாரண அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றப்படுகின்ற புதுமை இடம் பெறுகின்றது. வெளித் தோற்றம் அப்படியே இருக்க உள்த் தோற்றம் மாற்றம் அடைகிறது. இன்று இயேசுவின் திரு இரத்தத்தையும், உடலையும் ஆன்மீக உணவாகப் பெற்றுக் கொள்ளும் நீங்கள் இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றம் பெறுகிறீர்கள். நற்கருணை உங்கள் வாழ்வாக மாற வேண்டும். வெளி ஆடம்பரம் முக்கியம் அல்ல. நற்கருணை பெற்ற பின்பும் விரக்தி தொடர்கின்றது என்றால் அங்கே குடும்ப அன்பு இல்லை என்றே கூறமுடியும். இப்பிள்ளைகள் மட்டில் பெற்றோர், ஞானப் பெற்றோர் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் முன் உதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

''உன்னடி சரணடைந்தேன் இறைவா உன்னடி சரணடைந்தேன்" என்று ஏகோபித்த குரல் எழுப்பி தீப, தூப, மலர்களால் அஞ்சலி செய்து இறைவனை மகிமைப்படுத்திய சிறார்கள் ஒவ்வொருவரும் வழிபாட்டோடு ஒன்றித்துப் போன உணர்வை வெளிப்படுத்தினர்.

சுன்னாகம் பங்குத்தந்தை அருட்பணி. தா. நிருபன் நிஷானந்த அடிகளாரின் வழிநடத்தலோடு சகல ஒழுங்குகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

*சிறில் சுகந்தன் J.P, சுன்னாகம்.*

## பீடத் துணைவர் பட்டம்

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உருவாக்கம் பெற்றுவரும் அருட்சகோதரர்கள் ஜெயரஞ்சன், வின்சன், யஸ்ரின், மயூரன் ஆகியோர் கடந்த 03-06-2009 அன்று பீடத்துணைவர்களாக ஆயர் அவர்களால் உயர்த்தப்பட்டார்கள். பீடத் துணைவர் பட்டம் தியாக்கோன் பட்டத்திற்கு முன்னைய பட்டமாகும்.

## இத்தாலி ஆயர் பேரவை ஒரு மில்லியன் யூரோ நிதி உதவி

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக இத்தாலி ஆயர் பேரவை ஒரு மில்லியன் யூரோவை நிதி உதவியாக வழங்கியுள்ளது.

ஆயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை திருத்தந்தை ஊடாக விடுத்த வேண்டுகோளின் பயனாக இந்நிதி கரித்தாஸ் இலங்கை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## குருத்துவ திருநிலைப்படுத்தல்



அமலமரித்தியாகி அருட்சகோதரன் அமிர்தநாதர் இயூஜின் அமலறாஜ் ஆனித்திங்கள் 18ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் தம் முதல் நன்றித்திருப்பலியை நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆனித் திங்கள் 21ம் நாள், 2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

இவரின் பணிவாழ்வு சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும், செபங்களையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆனி 07 ஞாயிறு**
மூவொரு கடவுள் பெருவிழா

**ஆனி 13 சனி**
புனித அந்தோனியார் பெருவிழா

**ஆனி 14 ஞாயிறு**
திருவுடல் திருஇரத்தப் பெருவிழா

# ஊர்காவற்துறையில் திருவிழிப்பு ஆராதனை

ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு X.W ஜேம்ஸ் அடிகளாரின் வேண்டுகோளுக்கு அமைவாகவும், அருட்திரு P. இருதயராஜா அவர்களின் தலைமையிலும் யாழ் மாட்டின் வீதியில் இயங்கும் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு திருவிழிப்பு ஆராதனை மரியாள் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த திருவிழிப்பு ஆராதனையின் ஜெபநிரலுக்கு அமைவாக 30.05.2009 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு பாடல்கள் ஊடாக பங்குத்தந்தை அருட்பணி. X.W ஜேம்ஸ ஆரம்பித்து வைத்தார்.

இத்திருவிழிப்பின் சிறப்புச் செய்தியை அருட்திரு P. இருதயராஜா அடிகளார் வழங்கினார். இச் செய்தியில் அவர் தூய ஆவியின் வாழ்வுக்குள் எம்மை நாம் கையளிக்க வேண்டும். ஆவியின் அருட்கொடைகளை பெற்று உலகிலே சிறந்த சாட்சிகளாக நாம் வாழ அழைக்கப் பெற்றுள்ளோம் என்று கூறினார்.

இறுதியாக அதிகாலை 3.30 மணியளவில் அருட்திரு இருதயராஜா அடிகளாரும், பங்குத்தந்தை அருட்திரு X.W ஜேம்ஸ் அடிகளார் அவர்களும் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்கள். இந்த திருப்பலியின் மறையுரையில் பெந்தக்கோஸ்தே அனுபவம் அன்று திருத்தூதர்களின் தொடர் சாட்சிய வாழ்வாக அமைந்தது. தூய ஆவியின் அக்கினி அபிசேகத்தைப் பெற்று திருத்தூதர் திடத்தோடும், துணிவோடும் உயிர்த்த யேசுவிற்கு சாட்சியம் பகர்ந்தார்கள். அதேபோல் இன்று நாம் பெற்ற இந்த பெந்தக்கோஸ்தே அனுபவம் ''உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" (மாற் 16 :15) என்ற இயேசுவின் பணிப்புக்கு சாட்சிகளாகவும், நாம் இவ்வுலகில் எந்த, எந்த துறைகளிலும், எப்படியான நிலையிலும் இருந்தாலும் இந்த அனுபவத்தை மற்றவர்களோடு பகிர்ந்து வாழவும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறினார்.

இத்திருவிழிப்பு ஆராதனையில் அருட்சகோதரிகள், கன்னியர் மட விடுதிப் பெண்பிள்ளைகள், சென் அன்ரனிஸ் கல்லூரி விடுதி மாணவர்கள், ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலய பங்கு மக்கள், ஏனைய பங்கு மக்களும் கலந்து கொண்டனர். இத்திருவிழிப்பில் தாம் பரிசுத்த ஆவியிடம் பெற்ற அனுபவங்களை உணர்வு பூர்வமாக சாட்சியம் பகர்ந்தனர். இச்சாட்சிய நிகழ்வானது உண்மையிலேயே அங்கு சங்கமித்திருந்த மக்கள் அனைவரையும் ஒரு உன்னதமான பரிசுத்த ஆவியின் திட்டத்திற்குள் கொண்டு வந்தது என்பதை திடமாக உணரவும், அறியவும் முடிந்தது.

**செ. அமலனி**
**[புனித நீக்கிலார் பங்கு]**
**நாவாந்துறை.**

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளும் ஐ.நாவும் ஏதாவது தீர்வை எமக்கு வழங்கவேண்டும் என இலங்கை அரசை நிர்ப்பந்திக்க முடியும். ஆனால் நாம் எமது கொள்கைகளில் பிளவுபட்டிருந்தால் யாராலும் எதுவும் செய்து விட முடியாது தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் ஈ.பி.டி.பி செயளாளர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசியக் கூட்டணித் தலைவர்கள் ஆனந்த சங்கரி, முரளிதரன் (கருணா) பிள்ளையான், முஸ்லீம் கட்சித்தலைவர்கள எல்லோரும் தம் கடந்த கால நினைவுகளைப் பிளவுகளை மறந்து தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும். பழைய தவறுகளை ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட பலத்தை காட்டுவதன் மூலம் எமது சுபீட்சமான அமைதி வாழ்வை பெற முடியும். தமிழ் பேசும் மக்களாகிய எங்களிடம் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. வடக்கு கிழக்கு மக்களிடையேயான ஏற்றத்தாழ்வுகள் முஸ்லீம்களிடையேயான வேறுபாடுகள் என பலவுண்டு. ஆனால் இவற்றை நாம் காலப்போக்கில் தவிர்த்துக் கொள்ள முடியும். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பராஜசிங்கம் அவர்களிடம் இதுபற்றி கேட்ட போது ''எம்மிடையே வேறுபாடுகள் இருக்கின்ற போதும் தமிழ் பேசுகிறவர்கள் என்ற வகையில் நாம் ஒன்றுபடுகின்றோம். முதலில் உரிமைகளை பெறுவோம் பின் எம் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வோம்" என்று கூறினார். தமிழ்பேசுபவர்கள் என்ற வகைகளில் உரிமைகளை இனங்கண்டு உணர்ந்தவர்களாய் நாம் ஒன்றுபட்டு எமக்கு மறுக்கப்பட்டுள்ள உரிமைகளை வென்று எடுக்க எல்லோரும் ஓரணியில் நிற்போம், என்று தந்தை செல்வா எல்லோரையும் ஓரணியில் திரட்டி அகிம்சை போராட்டத்தை மேற்கொண்டார். காந்தி அடிகள் எல்லோரையும் ஓரணியில் திரட்டி இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தார். நேல்சன் மண்டலோ ஆபிரிக்க ஆக்களை ஓரணியில் திரட்டி விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு ஒன்றுபட்டு ஓரணியில் ஒரேகொள்கைக்காக போராடி வென்றவர்களை வரலாறுகளில் நாம் காண்கின்றோம்.

தமிழ் அரசியல் தலைவர்களிடையே ஓர் ஒற்றுமை உண்டு. தமிழர்களின் பிரச்சனைக்கு அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதே அந்த ஒற்றுமை ஆகும். அமைச்சர் தேவானந்தா ஆனாலென்ன தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஆனாலென்ன கிழக்கிலங்கைத் தலைவர்கள் என எல்லோரும் ஒரே கருத்தை கொண்டவர்கள். எனவே எல்லா தமிழ் அரசியல் தலைவர்களுமே ஒற்றுமையுடன் உரிமைக்காக குரல் கொடுக்கின்ற போது தான் எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும். இதில் இருந்தே மக்கள் யார் நல்ல தலைவர்கள் யார் தமிழினத்துரோகிகள் என்பதை கணிப்பிட முடியும். உரிமைப்போரில் செல்வநாயகம் காலம் தொடங்கி இன்றுவரை மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஏமாற்று நாடகமில்லாமல் சிறந்த மனதுடன் தமிழ் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு தமிழின ஒற்றுமையை உலகிற்குப் பறை சாற்றுவோம். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பதை உணர்ந்து கொள்ள இதை ஓர் சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

## உறவுகளுக்காய் உயிர் கொடுத்த உத்தமர்... மறைபணி ததேயூஸ் சறத்ஜீவன்

இறைவனின் அழைப்பதனை இதமாய் ஏற்று - என்றும்
கிறிஸ்துவின் வாழ்வுப் பயணமதை தனதாக்கி
குருத்துவத்தின் மாண்பினை தன்னகத்தே - ஏற்று
ஆறு ஆண்டுகள் ஆகுமுன்னர் எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தியது ஏனோ?

மக்களோடு மக்களாய் பணியுடன் பயணமதை
பாங்கோடு ஆற்றி எமையெல்லாம் தவிக்கவிட்டு போனதேனோ?
அன்பான பேச்சினாலும் பண்பான நடத்தையாலும்
எமை பாங்கோடு அரவணைத்த நீர்
எமையெல்லாம் விட்டு சென்றதேனோ...

உம் உருவாக்கத்தில் பல பயனை நாம் கண்டோம்
உம் உயிர் பிரியுமென நாம் நினைக்கவில்லை
அகதிகளின் அவலம் கண்டு தோழமையோடு குரல்கொடுத்து
பணியோடு உம் உயிரை அர்ப்பணித்து
உம் உறவுகளை அமைதியிழக்கவிட்டதேனோ...

எம்மைவிட்டு நீர் பிரிந்தாலும் உம் எண்ணற்ற
நினைவுகளை நாம் என்றும் மறந்திடோம்
இன்ப சன்னிதியில் மாட்சிமையோடு - இருந்திட
என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**JRS குடும்பம், இலங்கை.**

## குருநாகல் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



குருநாகல் மறை மாவட்டத்தில் இதுவரை ஆயராகப் பணியாற்றிய பேரருட்திரு ரேமன்ட் பீரிஸ் ஆண்டகை அவர்கள் இளைப் பாறியதைத் தொடர்ந்து பேரருட்திரு 'ரல்ட் பெரேரா ஆண்டகை அவர்கள் திருத்தந்தை அவர்களால் புதிய ஆயராக நியமனம் பெற்றுள்ளார். ஆயர் 'ரல்ட் ஆண்டகை இதுவரை காலி மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றியவராவார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org